www.padippakam.com

# காகம்

**Kakam**



"சிறகு விரித்து
விதையொன்று அலையும்
முளைக்க ஒரு பிடி
மண்தேடி"

.................இன்குலாப்

10 oktober 95

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தாகம்

"முற்றமெல்லாம் புழுங்கல்- அதனால்

நம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்."

- ஒரு தாய்

## முகம்

### இரண்டாவது பரம்பரை

தமிழல்லாத ஒரு பொதுச்சூழலில் ஒரு பையன் தோளில் பாடசாலைப் புத்தகப்பையுடன் நிற்பதைக் காணும்போது,

ஒரு கறுப்புச்சிறுமி இன்னொரு குழுச் சிறுமிகளுடன் விளையாடிக்கொண்டு நிற்பதைக்காணும்போது,

விளையாட்டுத்திடலில் பந்துவிளையாடிக் கொண்டிருக்கும் சிறுவர்களிடையே ஒரு தமிழ்ச்சிறுவன் அந்தப்பந்தை பறிக்கக் கூச்சமுற்று ஓரமாகும்போது ...

இவை வெறும் நிகழ்ச்சிகள் என்று புறம்தள்ள இயலவில்லை. இத்தகைய நிகழ்வுகளை தாய்நாட்டில் பார்க்கும்போது மனதுள் சந்தோசம் ஏற்படுவதுபோல இங்கு ஏற்படுவதில்லை. மாறாக



படிப்பகம்

www.padippakam.com

இந்த புலம்பெயர்ந்த இரண்டாவது சந்ததி பற்றிய ஏக்கமே பெருமூச்சாகின்றது.

இவை ஒருபுறமிருக்க புலம்பெயர் நாடுகளில் அகதிவாழ்வில் அகப்பட்டுக்கொண்ட முதலாவது சந்ததி, "வாழ்வின் ஸ்திரம்" ஒன்றுக்காக தன்னை ஈடுபடுத்தி அதுவும் பல சிக்கல்களோடு நகர்கின்றது. இந்த முதலாவது சந்ததி; ஏற்கனவே எதிர்பாத்திருக்காத புது வாழ்வு முறைக்குள் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் போது ஏற்படுகின்ற அவசரமும், பதட்டம், குழப்பம் என்பவற்றோடு அன்றாடச் சிக்கல்களை மையப்படுத்தி அவற்றிற்கான தற்காலிக தீர்வுகளை காண்பதாகவே இப்புலம்பெயர் வாழ்வானது "தற்காலிகம்" என்ற உறுதியற்ற தன்மையோடு இன்று நடந்துவருகின்றது. இத்தகைய அவசர சமூகஇயக்கத்துள் தற்காலிக தன்மைவாய்ந்த வாழ்வியக்கத்துள் ஈடுபடும் முதலாவது சந்ததியின் தொற்றுச் சமூகமான இரண்டாவது சந்ததி தன்னை தமிழல்லாத ஒரு சூழலுக்கு வாழத் தயாராகி வருவதை நாம் காண்கிறோம்.

இன்னிலையில் முதலாவது சந்ததியிலிருந்து சமூக அக்கறையுள்ள பொது ஸ்தாபனங்கள் பலவும் தகுந்த திட்டமிடலும், ஆழமான வேலைத்திட்டங்களுமற்று தமிழிற்குரிய சாதாரண பண்புகளோடு இயங்கி வருகின்றன. தாய்மொழிக் கல்வி, அடுத்த சந்ததிக்கு எங்ஙனம் தமிழ் அடையாளங்களை எடுத்துச்செல்லல், பொதுவாக தமிழின் அடையாளங்களை எங்ஙனம் அவர்களிடம் கட்டிக்காப்பது, என்பனபோன்ற அவசர நடவடிக்கைகளுக்கு எமது முதலாவது சந்ததி இன்னமும் தயாராகவில்லை.
இதையே இங்கு ஒரு அவசர சிந்தனை ஈர்ப்பாக காகம் கோடிட்டு நிற்கிறது.

இத்தகைய துறைகளில் ஆர்வமுள்ளவர்கள், அமைப்புக்கள் என்பன அவசரமாக செய்யவேண்டிய கடமைப்பாட்டினை வலியுறுத்தி இத்தகைய முயற்சிகள் முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில் காகமும் தன்னாலான பங்களிப்பை வழங்கும்.
"அடுத்த சந்ததி எம்மை பழிக்குமென்பதல்ல பயம். அவர்கள் பரிதாபத்திற்குரியவர்கள்."

காகம் ■

உள்ளே.......


| பக்கம் | விடையம் |
|---|---|
| 3 | முகம் |
| 5 | H.C.Andersen இளம் பருவம் |
| 7 | ஒரு ஊரில் ஒருராசகுமாரன் |
| 10 | எதுதிசை? |
| 13 | ஆந்திரே |
| 16 | மலர்தல்,வாடல்,தெரிதல் |
| 18 | வரலாற்றிற்கு ஒரு கடிதம் |
| 22 | எனதுநினைவில் எனது கிராமம் |
| 23 | கவிதைகள் |
| 24 | மேலைநாடும்......... |
| 26 | இரு கவிதைகள் |
| 27 | தோப்புக்கரணங்கள் |
| 29 | போட்டி |
| 30 | இல.யா.1 போட்டிமுடிவு |


"சூரியப்பூச்சிகள்" கவிதைத்தொடர் தவிர்க்கமுடியாமல் இடம்பெறவில்லை. அடுத்தஇதழில் பாருங்கள்.

■

டென்மார்க்கில் வசித்துவரும் 10 – 15 வயதுக்குட்பட்ட 10 குழந்தைகளிடம் "நீங்கள் ஏன் டென்மார்க்கில் வசித்துவருகின்றீர்கள் என" தொலைபேசிமூலமாக கேட்டறிந்தோம். பெரும்பாலானவர்கள் "அங்கு சண்டை நிகழ்கிறது. அதனாலேயே" என்று பதிலளித்தனர். மேலும் என்ன சண்டை? என்பதை அவர்களில் பலர் அறிந்திருக்கவில்லை...........காகம்............



படிப்பகம்

www.padippakam.com

## H.C.ANDERSENனின் வாழ்வில் "இளம் பருவம்"

தமிழில்: விழி

H. C. Andersen அவர்கள் சிறுபையனாக இருந்தபோது அவனிடம் விளையாடுவதற்கு அதிகம் விளையாட்டுச்சாமான்கள் இருக்கவி ல்லை. ஆனால் அந்த நதிக்கரையில் இருந்த அனைத்துடனும் அவனால் விளையாடமுடி ந்தது. ஒரு தவளை, அல்லது ஒரு வண்டு, ஒருவண்ணத்துப்பூச்சி அல்லது ஒரு இலை இப்படி எத்தனை எத்தனையோ. மழைபெய்யும்போது அவன் ஒரு பெரிய இலையை எடுத்து தலையில் கவிழ்த்துக்கொள்வான். அது அவனது குடையாகிவிடும். சூரியன் வெப்பத்துடன் பிரகா சிக்கும்போது அவன் நீண்டநேரம் நதிக்கரையிலிருந்து ஒருபெரிய இலையினூடாக இந்த உலகத்தை பார்த்தவாறு இருப்பான். உலகம் முழுவதும் பச்சையாக அதனூடாக அச்சிறுவனுக்கு தெரியும். வண்ணத்துப்பூச்சிகள் பலநிறமுடையனவாயினும் அவன் இவ்வாறு பார்க்கும்போது அவையாவும் ஒரே நிறமானவையாக பச்சையாகவே தெரியும்.

போரில் காயமுற்று தந்தை இறந்தபோது அந்த நதிக்கரையிலேயே நீண்டநேரத்தை செலவிட்டான் அச்சிறுவன். அங்கிருக்கும்போ தெல்லாம் தான் இந்த உலகத்தில் தனியே இல்லை என்பதை உணர்ந்தான். எந்தநேரமும் அங்கே யாரோ அவனுடன் கதைத்துப்பேசுவதற்கு இருந்தனர்.நீர்எலி,தவளை, பறவை, வண்ணத்து ப்பூச்சியெல்லாம் அவனுக்குப்பேச்சுத்துணை யாகின. அவன் அழும்போதெல்லாம் அவையெல்லாம் அவனுடன் சேர்ந்து கவலைப்பட்டன. அவன் சந்தோசப்பட்டபோதெ ல்லாம் அவையும் அதில் பங்கெடுத்துக்கொ ண்டன.

தந்தையின் மறைவினால் அவனின் தாயார் வேலைக்குப்போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. டென்மார்க்கில் ஓடென்ஸ்ச நதியில் அவள் ஊர்மக்களது துணிகளை துவைக்கும் வேலையை மேற்கொண்டாள்.அக்குளிர்ந்த நதிக்கரையில் நீண்டநேரம் நின்று துணிதுவைக்கும்போதெல்லாம் அவனது தாய் அடிக்கடி குளிரினால் தாக்கப்பட்டாள். உடலைவெப்பமாக்கிக்கொள்ள மதுவகைகளை அருந்தத்தொடங்கியவள் தினமும் போதையிலேயே வீட்டுக்குவரத்தொடங்கினாள். மற்றவர்கள் அச்சிறுவனை பரிதாபத்துடன் பார்த்தனர்.ஆனால் அச்சிறுவனோ இதுபற்றியெ ல்லாம் அலட்டிக்கொள்ளவில்லை. தாயார் வேலைக்குப் போனபோதெல்லாம் அவன்வீட்டில் நீண்டநேரம் தனியே இருக்கப்பழகிக் கொண்டான். அந்தநேரத்தில் அவன் ஒன்றேஒன்றுக்காக மாத்திரம் மிகவும் கவலைப்பட்டான். தங்கள் வீட்டிலிருந்த விளக்கை அவன் அடிக்கடி உரஞ்சிப்பார்த்து அதற்குள்ளிருந்து ஏதாவது பூதம்வருகிறதா என்று பார்த்தான். அலாவுதீனுக்கு அப்பூதம் உதவியதுபோல தனக்கும் அப்பூதம் உதவவிரும்பினால் அதனிடம் தான் ஒரு சாக்குநிறைய பவுண்காசுகள் கேட்டவேண்டு மென்று நினைத்துக்கொள்வான். அப்பணத்தில் தனக்குவேண்டிய உடைகளை வாங்கிக்கொ ண்டு மிகுதியை தாயாரிடம் கொடுத்தால் அவள் வேலைக்குப்போகாது வீட்டிலேயே இருக்கலாமென்று அச்சிறுவன் ஆசைப்பட்டான் ஆனால் அதற்குள்ளிருந்து ஒருபூதமேனும் வந்து அவனுக்கு உதவிசெய்யவில்லை. மாறாக அதிகநாட்கள் பசியுடனேயே அச்சிறுவன் இரவு படுக்கைக்கு சென்றான்.

சிலநேரங்களில் வயல்அறுவடைக்கும் அவனது தாயார் சென்று உதவுவதுண்டு. அப்போதெல்லாம் அவனும் தனது தாயாருடன் அவ்வேலைத்தல ங்களுக்குச் செல்வான். அறுவடைமுடிந்ததும் எல்லோருக்கும் உணவும்,குடிவகைகளும் பரிமாறப்படும். சிறுவர்களுக்கு பழரசம்கிடைக் கும். அந்த இடத்தில் பலவகைப்பட்ட பாடல்களும் கதைகளும் பாடப்பட்டும்



படிப்பகம்

www.padippakam.com

விபரிக்கப்பட்டும் வந்தன. அவற்றை அவன் நன்றாக கேட்டு மனதில் கிரகித்துக்கொண்டான். மந்திரக்காரியும் போர்வீரனும்,சின்னக்கிளவ்சும் பெரியகிளவ்சும், பட்டாணிக்கடலையின்மேலே அரசகுமாரி போன்றவை அச்சிறுவனுக்கு மிகவும் பிடித்திருந்தன.சிறுவனாக இருந்தபோது இக்கதைகளை மிகவும் இரசித்து மகிழ்ந்ததனாலேயே H.C.Andersen அவற்றை பின்னர் வீரசாகசக்கதைகளாக எழுதினார்.

ஒருநாள் தாயார் வேலையிலிருந்து வீடுதிரும்பியபோது மகன் ஒருநீண்ட இறுக்கமான சட்டைஒன்றை காலைமூடி இறுக்கமாக போட்டவாறு ஒரு சிறியகதிரையில் குப்புறப்படுத்தவண்ணம் தானே அந்த "சிறிய கடற்கன்னி" என்று காற்றில்நீந்தியவாறு விளையாடிக்கொண்டிருந்தான்.அந்தக்கடற்கன்னியின் சட்டையை கழற்றி எடுக்க அவனின்தாய்க்கு அதிகநேரமெடுக்கவில்லை.

பாடசாலைவாழ்க்கையும் அவனுக்கு சந்தோசத்தைத்தந்ததில்லை. அவனது உடலுருவம் ஒன்றே மற்றைய மாணவர்கள் அவனை பரிகாசம் செய்யப் போதுமானதாக இருந்தது. அவனது கால்கள் அவனது உடம்பின் அளவுக்கு பொருத்தமில்லாதவகையில் மிகவும் நீண்டிருந்தன. மூக்கு பறவையின் அலகைப்போல கூர்மையாக இருந்தது. மொத்தத்தில் அவன் ஒரு கொக்கைப்போல் இருந்தான். அத்துடன் அச்சிறுவனின் பேரன் மூளைக்கோளாறினால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருந்தவர். இதனால் அச்சிறுவன் பாடசாலைச்சிறுவர்களுக்கிடையே கவித்துவத்துடன் கதைத்தபோதெல்லாம் அவனுக்கும் பேரனைப்போலவே மூளைக்கோளாறு ஏற்ப்பட்டுவிட்டதாக கேலிசெய்யப்பட்டான்.

14 வயதில் வேலைக்கு அனுப்பப்பட்டான் அச்சிறுவன். பெண்குரலைப்போன்று மெல்லிய குரலாக அவனது குரல் இருந்தமையால் வேலைக்குப் போன இடங்களிலும் அவனை பலர் பரிகாசம் செய்தனர். வேலையால் அழுதுகொண்டு வந்துநின்ற மகனைக்கண்டதும் அவனது தாயாருக்கு பொறுக்கவில்லை. அன்றிலிருந்து அவன் வீட்டிருந்து கொண்டான்.

அவனது தாயார் ஒருபுதிய கணவனைத்தேடிக் கொண்டாள். அப்புதிய கணவனே அச்சிறுவனில்அடங்கிக்கிடந்த கவித்துவத்தன்மையை புரிந்துகொண்டு அவன்ஒரு அசாதாரணமானவன் எனக்கருதி அவனை இவ்வெளி உலகத்துள் சென்று அனுபவங்களை பெற்றுவர ஆலோசனை வழங்கினார்.


ஆனால் அச்சிறுவனுக்கோ தாயாரை விட்டுப்பிரிய மனமில்லை.

அந்நேரத்தில் அவர்களுக்கு ஒரு சோதிடக்காரி சொன்ன வாக்குப்படி.......

"அவன் டென்மார்க்கின் இன்னொரு இடமான கொப்பனேகனுக்கு சென்றால் எதிர்காலத்தில் அவனின் பிறந்த இடமாகிய ஓடென்ஸ்சவுக்கு பெருமை சேர்த்துத் தருவான்" என்பதற்கிணங்க அச்சிறுவனின் பயணம் தயாராகியது. "அச்சோதிடக்காரி எங்ஙனம் இடங்களைக்கூட தனது சோதிடத்தில் சுட்டிக்காட்டுகின்றாளே" என்பது அச்சிறுவனுக்கு விளங்கவேயில்லை.

வீட்டைவிட்டுப்பிரிய மனமில்லாது அழுதபடியே ஒரு தபால்ஏற்றிச்செல்லும் குதிரைவண்டியொன்றில் எதிர்காலத்தில் உலகை அதிரவைக்கும் கவிதைகளை தரப்போகும் ஒரு சிறுவனின் வெளியுலகை நோக்கிய பயணம் ஆரம்பமாகியது.

(H.C.Andersens liv Fortalt for Børn எனும் நூலிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் சுருக்கம்.)





படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

# ஒரு ஊரில் ஒரு ராசகுமாரன்...................

## ...............வை.சி. சிவநாதன்

"ஒரு ஊரில் ஒரு ராசா. அவருக்கு ஒரு ராணி இருந்தாள்......அவருக்கு உன்னைமாதிரி ஒரு ராசகுமாரன் இருந்தான்....." என்று விடுகை விட்ட தகப்பனை இப்போது ஓரளவுக்கு உணரக்கூடிய அளவுக்கு கமலன் வளர்ந்துவிட்டான். இப்போதெல்லாம் கதைசொல்ல வெளிக்கிட்டாலே "முன்னொரு காலத்தில் ஒரு ராசகுமாரி" என்று கூறி விசயத்திற்கு வரவைத்துவிடுவான் கமலன்.

தகப்பன், தாயை அவன் குழந்தையாக இருந்த காலத்தில் நீண்ட பயின்மரங்களைப் பார்ப்பதுபோன்ற காலம் போய்விட்டது. தகப்பன், தாய் மட்டுமல்ல நீண்ட நெடிய மரங்களாகத் தெரிந்தவர்கள் வீட்டுக்கு வந்துபோகும் மாமாக்களும்தான்.அந்த மாமாக்கள் சிறிதுகாலம் செல்ல பெயர்சொல்லி மாமாக்களாக அழைக்கப்பட்டனர். இப்போது மாமாக்களையும், தகப்பன் தாயையும் கூட எட்டும் தூரத்தில் அவன் வளர்ந்துவிட்டான்.

எட்டும்தூரம் வந்ததும் மாமாக்களில் சிலர் அவனது அண்ணாக்களாகிவுட்டனர். கமலன் அண்ணா என்று அழைப்பது அன்போடு என்பது மாமாக்களாக இருந்து இன்று அண்ணாக்களாக மாறிய மாமாக்களுக்கு சற்று அதிர்ச்சிதான்.
என்னசெய்வது இயற்கை அவ்வாறு நிற்பந்திக்கிறது.அந்த மாமாக்களுக்கு விளங்காதது கமலனின் தவறு அல்ல என்பதும் இன்னும் சில மாமாக்கள் டெனிஸ்மொழி உச்சரிப்பில் பிழைகூறினால் எரிந்துவிழுவதும் கமலனுக்கு கடுப்பாக இருந்தது.
நிலத்தளவு இருந்தவன் தோள் அளவு வந்துவிட்டான். இனித்தோழன் என்ற உணர்வு தகப்பனுக்கு வந்துவிட்டது.தாய் "அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவனுக்கு விளங்காது" என்று கூறும்போது தகப்பன் கடுப்பாகிவிடுவார். "கமலன் உருவத்தால் மட்டும் பெரியவன் ஆகிவிட்டான் அவனுக்கு வயது 16 தானே" என்பார்.
" இல்லை அவன் மக்கு. மண்டை யிக்கை ஒண்டுமில்லை" என்பாள் தாய்.
தகப்பனுக்கு பேய்க்கடுப்பாகிவிட்டது.
உருவம் வளர்ந்த அளவு மூளைக்கு விசயம் சேரயில்லை.நாங்கள் வேலை,வீடு,ஊரில் உள்ள உறவினர்,மாதக்கடைசியிலும் மாதத்தொடக்கத்திலும் கட்டாய அலுவல்கள். இப்படி இருக்க .....கமலன் வந்ததுமுதல் இன்றுவரை பாலர்பராமரிப்புநிலையம்,பொழுதுபோக்கு நிலையம், இப்ப பாடசாலை என்று அவன் எங்களுடன் இருப்பதைவிட வெளியே டனிஸ் சமூகத்துடன் தானே அவன் வாழ்கிறான். அவனுக்கு என்ன தலைவிதியே இந்த சீட்டுக்காசு, ஊரில உள்ள சொந்தங்கள், இங்குள்ள சொந்தங்களின் பிரச்சனைக்கு தலைபோடவேண்டும் என்று" அலுத்துக்கொண்டார் தகப்பன்.

இந்தச்சண்டைகள் கமலனின் காதுகளுக்கு எட்டியும் அவன் எதையும் வேடிக்கையாக எடுத்துக்கொள்ளும் பழக்கமுள்ளவனாக மாறிவிட்டான்.
ஒருநாள் "ஒருஊரில ஒரு ராசகுமாரன்" கதைசொல்லியும் அவன் அழுகையை நிறுத்தவில்லை.வெளியே கடையில் சாப்பிடச் செல்லவேண்டுமென அடம்பிடித்தான்.அப்போது கமலனுக்கு வயது 10.
இனி என்ன அடி ஒன்றுதான் ம[illegible] என்று நினைத்த தகப்பன்: காதில் ஒ[illegible]
முறுக்கி சோபாவில் தூக்கிப்[illegible]

www.padippakam.com

குழப்படி செய்யக்கூடாது" என்று உறுக்க..... இதை அங்கு வந்திருந்த சுகாதாரத்தாதி பார்த்து விட்டாள்.அவள் அதை நகரசபையில் அறிவிக்க "தகப்பனுக்கு மூளை சரியில்லை" என்ற சேதியுடன் பிள்ளையை பாரமெடுக்க நகரசபை அதிகாரிகள் வந்துவிட்டார்கள்.
அதில நடந்த அல்லோல கல்லோலத்தை நினைத்தால் "Far selv syg" ( அப்பா ஒரு நோயாளி )என்று சொல்லிக் கொள்வான் கமலன். அப்போது அமைதியானவர்தான் தகப்பன்.
இன்று எதிலும் அவதானம்.

வீட்டில் சின்னச்சலசலப்பு வந்தால் அப்பா அம்மா! நான் விளையாடப்போவதாகக்கூறி வெளியில் விளையாடப்போவான். இப்போது அவன் உதைபந்தாட்டம் ஆடுவதற்கு மைதானத்திற்கு சென்றுவிட்டான்.
என்ன எப்போதும்போல பந்து ஒரு மாமாவின் கையில்.அவர் பிரசங்கம்.கமலன் " மாமா பந்தடிக்க வந்தால் பந்தை அடிப்போம். பந்தைத் தாங்கோ" என்று வாங்கி நாலுதட்டுத்தட்டி, இரண்டுவெட்டு வெட்டி சும்மா கிடந்த கோல்போஸ்டுக்குள் ஒரு கோல் அடித்தான். இதைப்பார்த்த மற்ற மாமா "கமலன் சொல்லுறது சரிதான பந்தடிக்கவந்தால் பந்துவிளையாடிவிட்டு போறதைவிட்டு அவன் இப்படி இவன் இப்படி என்று ஏன் கதைப்பான்." என்றார். இப்படிக்கூறிய மாமாவை கமலன் "Xஅண்ணா சொல்லுறது மாதிரிச் செய்தால் சரிதானே " என்றான்.
ஆனால் X அண்ணா என்று சொன்னது அந்த மாமாவுக்கு பிடிக்கவில்லை. அவர் எப்போதும் மாமாவாக அதாவது ஆலோசனை சொல்பவராக மட்டுமே இருக்கவிரும்புவார். எதையும் கேட்பதில் அவருக்கு இன்பம் இல்லை, இஸ்டமும் இல்லை என்பது கமலனுக்கு தெரிய வாய்ப்பில்லை.

ஒருவாறாக விளையாட்டு பயிற்சி தொடங்கிவிட்டது.கமலன்பிரிவினர் ஒருகோல் அடித்துவிட்டனர்.
சிறிதுநேரம்தான். ஒருமாமா பந்தை கையில் எடுத்துவிட்டார்.மீண்டும் மனம்தளராத விக்கிரமாதித்தன்போல் முருங்கை மரத்தில் ஏறி அங்கு தொங்கும் உடலைவெட்டி வீழ்த்தி அதனை தோளில் தூக்கி நடக்கையில் அதனுள் இருந்த வேதாளம் வந்ததுபோல் பந்தை வைத்துக்கொண்டு மாமா ஞாயம் பேசத்தொடங்கிவிட்டார். ரத்த உருத்தில்தான் மாமாக்கள் வருவது கமலனுக்கு தெரிய வாய்ப்பில்லை.

கமலனும் சீச்சீ....இந்தப்பழம் புளிக்கும் என்று வீட்டுக்கு வந்துவிட்டான். வந்தவன் "அம்மா பசிக்குது" என்றான்.
"கமலன் சோறு கறி கிடக்கு போட்டுச் சாப்பிடு" என்றாள் தாய்.
அப்பாவுக்கு கலாச்சார விழாக்கூட்டத்திற்கு போட்டுவந்த களைப்பு வேறு. அப்பா இன்றைக்கு வெள்ளி. சனி ஞாயிறு விடுமுறைக்கு ஆறலாம் என்ற அலுப்பு.

கமலன் குளித்துவிட்டு வந்தான்.சோறு போடவில்லை. அப்பாவும் அம்மாவும் பாட்டுக்கொப்பி பாக்கினம். பக்கத்தில் போய் இருந்த கமலன்"அம்மா பசிக்குது" என்றான். "போய் போட்டுச் சாப்பிடு. எனக்கு வேலை இருக்கு"என்றாள் அம்மா.குஷ்பு,மீனா,ரோஜாக் களுடன் 47 42 35 30 வயது இளசுகள் ஓடிப்பிடித்து விளையாட, இசைஞானி அவர்களும் ஏ.ஆர். ரகுமான் தேவா ஆகியோர் உயிரூட்டியிருந்த பாடல் காட்சிகளுக்கு தகுந்தாற்போல் அபினயங்கள் வேறு.
இனி என்ன கமலன் எழுந்து சோத்தையும் ஆட்டிறைச்சிக் கறியையும் கோப்பையில் போட்டான்."தம்பி! கமலன் அது ஆறியிருக்கும் சூடாக்கி எடுத்துச் சாப்பிடு" என்று கூறிய தகப்பனுக்கு அந்த சோற்றை போட்டுக்கொடுக்க கொஞ்சம் அலுப்புத்தான்.
அதைப்போட்டு சூடாக்கி எடுத்தவன் சோற்றுக்



படிப்பகம்

www.padippakam.com

கோப்பையுடன் தாய் தகப்பன் இருந்த இடத்திற்கு பக்கமாகச்சென்று அவர்களுடன் சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

"தம்பி கீழை காப்பற் புதிசு.அதோடை சோபாவும் புதுசு அப்பன். எழும்பிப்போய் சாப்பாட்டு மேசையில் இருந்து சாப்பிடு தம்பி" என்றார் தகப்பன். கமலன் எதுவும்கேட்காததுபோல் பாடல் காட்சிகளை பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஒருக்கால் சொன்னால் உனக்குவிளங்காதே கமலன். எழும்பிப்போ" என்றாள் தாய்.

கமலன் கடுப்பாகிவிட்டான்.விறுக்கென்று எழுந்துவிட்டான்.

கமலன் சாப்பாட்டுமேசையில் உட்கார்ந்து சாப்பிடத்தொடங்கிவிட்டான். தாய் கமலனுக்கு விளங்கவில்லை என்றது தகப்பனுக்கு கோபம்தான்.சனி ஞாயிறு வீணாகிவிடக்கூடாது என்பதில் அவதானமாக இருந்தார்.

"நல்லபாட்டு, நல்லஇசை சூப்பர் டான்ஸ்.புதுடிசைன் தோடு பாத்தியளோ. ஒருவித்தியாசமான கலர்டிசைனும், பறவாயில்லை சீலை என்ன!" என்றாள் தாய். தகப்பன் தட்டவா முடியும்.டெனிஸ் சட்டம் அப்படி கிடக்கு என்று தலையை ஆட்டினார். கமலன் சாப்பிட்டதும் கோப்பையை கழுவவில்லை. கையைமட்டும் கழுவிவிட்டு தனது அறைக்குள் சென்று கதவை அடித்துச்சாத்திக்கொண்டான்.

தாய், தகப்பனுக்கு கண்காட்டி "ஆளுக்கு கோபம் போல" என்று தலையையவேறு ஆட்டிக்கொண்டாள்.பதிலுக்கு தகப்பனும் தலையை ஆட்டியாகவேண்டுமே.

ஆம் ஆம் கமலனுக்கு கோபம்தான்.

அறையினுள் சென்றவன் தனது கொம்பியூட்டரை இயக்கினான்.அவனுக்குப்பிடித்த வேட்டைவிளையாட்டை தட்டிவிட்டான். அங்கு எதிர்ப்படும் இராணுவவீரர்களை வேட்டையாட தனக்கான ஆயுதமாக "மெசின்ஹண்" ஒன்றை தெரிவுசெய்தான். கொம்பியூட்டரில் அறைகள் மாறிக்கொண்டு துப்பாக்கி சென்றுகொண்டிருந்தது.

முதலில் ஒரு இராணுவவீரன் வந்தான்.அவனைச் சுடும்போது "நரகம்பிடித்த லாஸ்" என்று கூறிக் கொண்டான். லாஸ் யாருமல்ல.அவனது வகுப்பில் படிக்கும் வெளிநாட்டவரை பிடிக்காத ஒரு மாணவன்.


இரண்டாவதாக வந்த இராணுவத்தை சுடும்போது பந்து வைத்துக்கொண்டு ஞாயம் பேசும் மாமாவை மனதில் நினைத்துக்கொண்டு "தொலைந்துபோ!" என்றான்.

மூன்றாவதாக பெண் ராணுவ வீராங்கனை வந்தாள்.

அவளைச்சுடும்போது "மன்னித்துக்கொள் அம்மா" என்றான்.

நான்காவது இராணுவவீரன் வந்தான்.அவனைச் சுடும்போது "மன்னிக்க அப்பாவே" என்றான்.

வந்த இடத்தில், இருந்த இடத்து நினைப்புகளுடன் வாழ்வதும், வந்தஇடத்தில் வளரும் ராசகுமாரர்களையும் இளவரசிகளையும் அவர்களுக்குரிய சூழலில் எங்களால் எதைச்செய்யமுடியும் என்பதே முக்கியம் என்பதை கமலன் அறிவான். ●





படிப்பகம்

# எது திசை ?

சிறுகதை

**விழி**



கதவைத்திறந்துகொண்டு வீட்டிற்கு வெளியே இறங்கி நடந்தான் யதி. சற்றுக்குளிருடன் கூடிய "சமர்" காலத்தின் இளங்காலைக்காற்று முகத்தில் சில்லென்று அடித்தது. மனதிற்குள் பரவிக்கிடந்த இறுக்கத்திற்கும் வேதனைக்கும் இந்தக் காலைக் காற்று சற்று இதமாக இருந்தாலும் அவையெல்லாம் அவனைவிட்டு முற்றுமுழு தாகப் போனதாக தெரியவில்லை. முதுகில் இருக்கும் பிரயாணப்பைகளை சற்று அசைத்துத்தூக்கி முதுகுடன் ஒட்டியிருக்கு மாறு சரிசெய்துகொண்டு நடந்தான் அவன். அன்று 7 ம்வகுப்பு மாணவர்கள் அனைவரும் சுற்றுலா ஒன்று செல்வதற்கு ஏற்பாடுசெய்யப் பட்டிருந்தது. அவனுடன் சேர்த்து அவர்கள் வகுப்பில் 16 பேர் இருந்தனர். யேர்மனிக்கும் டென்மார்க்கிற்குமான எல்லைப்பகுதிக் கிராமம் ஒன்றில் 5 நாட்கள் தங்கி சுற்றிப்பார்ப்பதற்கான பிரயாணத்திற்கு வகுப்பில் நாட்குறித்தபோது அவன் எவ்வளவு மகிழ்ந்துபோயிருந்தான். ஆனால் இன்று.....?

பின்னால் திரும்பி வீட்டைப்பார்த்தபோது வீட்டுவாசலில் அம்மாவும் அம்மாவை ஒட்டியவாறு தங்கை யாமினியும் கையசைத்தவாறு நிற்பது தெரிந்தது.பதிலுக்கு கையசைத்துவிட்டு தொடர்ந்து நடந்தான் யதி. அந்த வீட்டுக்கூட்டங்களுக்கிடையே அந்த ஒற்றையடிப்பாதை தொடர்ந்துகொண்டிருந்தது. மனம் குதூகலமாக இருக்கும் நாட்களில் இந்த ஒற்றையடிப் பாதையைவிட்டு அதற்குப்பக்கத்தே மேடாகக் காணப்பட்ட;வின்ரர்காலத்தில் பனிசறுக்கி விளையாடப்பயன்படும் அந்த திடலுக்குமேலாக ஏறி, களைக்கக்களைக்க கீழிறங்கி ஓடி அந்த ஒற்றையடிப்பாதையின் மறுமுனையை இரண்டே நிமிடத்தில் வந்தடைவான் யதி. ஆனால் இன்று அதற்கும் அவனுக்கு விருப்பமில்லை.

அம்மாவும் அப்பாவும் ஏன்இப்படியாக நடந்து கொள்கின்றார்கள்?
சின்னச்சின்ன விடையங்களுக்கெல்லாம் பெரிய பெரிய வாய்த்தகராறுகள்,தர்க்கங்கள்.
தொடர்ந்து இரண்டுமூன்று நாட்கள் ஒருவருடன் ஒருவர் கதைக்காதிருப்பதும் அங்கு வழமையாகிவிட்டன. அந்த இரண்டுமூன்றுநாட்கள் வாரக்கணக்கிலும் இழுபடுவதுண்டு. நரகம்பிடித்த அந்த நாட்களை வெறுத்தான் யதி.
வீடு மௌனத்தில் ஆழ்ந்திருக்கும். அவரவர் தங்கள் வேலைகளைநோக்கி இயந்திரமாக அசைவர். தங்கை யாமினிகூட அவனிடம் கதைக்கும்போது "குசு குசு" வென்று மெல்லக்கதைப்பதைப் பார்க்க பரிதாபமாக இருக்கும். போதாததற்கு அப்பாவும் அம்மாவும் தங்கள் தங்கள் கோபங்களைக் காட்ட



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைகளாகிய அவர்களை கருவிகளாகப் பாவிப்பதும் அவ்வப்போது அடிகிடைப்பதும் அங்கு ஒரு சாதாரணநிழச்சிதான்.
ஏன்....?
ஏன்.இப்படி ......இலங்கையில் இருந்தபோதும் டென்மார்க்கிற்கு இடம்பெயர்ந்த புதிதிலும் வாழ்க்கை எவ்வளவு ஆனந்தமாக போனது. இப்போ அம்மா அப்பா இரண்டுபேருமே வேலைக்கு போகின்றவர்கள். அவர்களுக்குள் ஏன் இந்த முரண்பாடு ?
இது எதனால் ஏற்பட்டது?
யதிக்கு எதுவும் விளங்கவில்லை. அப்பாவும் அம்மாவும் சந்தோசமாக இருக்கும் நாட்களில் இப்படியான சந்தர்ப்பங்களை தான் வெறுப்பதாக சாடைமாடையாக சொல்லியிருக்கிறான். ஆனால் அதை அவர்கள் புரிந்துகொண்டதாகத்தெரியவில்லை.

தனது சுற்றுலாப்பயணமும் இப்படியான நாட்களிலா வந்துசேரவேண்டும்?
இரண்டுமூன்று நாட்களாக வீட்டில் ஆளுக்காள் முகம்கொடுத்துப் பேசிக்கொள்ளவில்லை.
அப்பா காலையில் வேலைக்குப் போனபோதுகூட தனது பிரயாணத்தைப்பற்றி ஏதும் கதைக்காததும் "போய்வா!" என்று வழியனுப்பிவைக்காததும் நினைவிற்கு வர யதியின் கண்கள் கலங்கின.
தனது இந்த மனநிலையை யாருடன் பகிர்ந்து கொள்வது?

காற்சட்டைப்பையை தொட்டுப்பார்த்துச் சரிசெய்துகொண்டான்.கைச்செலவுக்கு நாளொன்றிற்கு 20 குரோன்கள் வீதம் ஐந்து நாட்களுக்குமாக 100 குரோன்கள் கொண்டுவரவேண்டுமென்பதையும்மீறி அம்மா தந்த பணம் காற்சட்டைப்பையில் கனத்தது.
ஒன்றை இன்னொன்றால் ஈடுசெய்யமுனைகிறாளா?
வீட்டுக்கூட்டங்களைத்தாண்டி அதை அடுத்திருந்த பெரியவீதியில் நடக்கத்தொடங்கினான் யதி. அந்தவீதியை தொடர்ந்துவந்த சந்தியின் வலதுகரை மூலையில்தான் அவனது வகுப்பில் படிக்கும் "ஜோனாசின்" வீடு.
யோனாசும் ,யதியும் நெருங்கிய நண்பர்கள். விடுமுறைநாட்களில் இரண்டுவீட்டிலும் மாறிமாறி விளையாடுவார்கள்.
ஜோனாசின் அப்பா, அம்மாவிற்கிடையே திருமண முறிவேற்பட்டு அவனது அப்பா அவர்களை விட்டுவிட்டுப் போனபோது ஜோனாசின் வீட்டுக்குப்போய் விளையாடக்கூடாதென்று யதிக்கு வீட்டிலிருந்து கட்டளை கிடைத்திருந்தது. இருந்தும் அவர்களிருவரும் நல்ல நண்பர்களாகவே இருந்துவருகிறார்கள்.

ஜோனாசின் வீட்டைத்தாண்டி நடந்தான் யதி. வாசலில் ஜோனாசின் அப்பாவின் கார் நின்றிருந்தது. றோட்டை அண்டியிருந்த வீடாதலால் வீட்டிற்குள் ஜோனாஸ் தனது பெற்றோருடன் சேர்ந்திருந்து கதைப்பது ஜன்னலூடாகத் தெரிந்தது.
ஜோனாஸ் சுற்றுலாவுக்கு செல்வதால் அவனுடன் சேர்ந்து காலை உணவு சாப்பிட்டு அவனை வழிஅனுப்புவதற்காகவே அவனது அப்பா வந்திருக்கவேண்டும்.
தொடர்ந்து நடந்தான் யதி. அதே பாதையில் நூறுமீற்றர் அளவில் நடந்துசென்று வலதுபக்கம் திரும்பினால் அவனது பாடசாலை வந்துவிடும்.
இதேமனநிலையுடன் சுற்றுலாவில் 5 நாள்கள் எப்படி இருக்கமுடியும்?
அம்மாவும் அப்பாவும் தங்கையுமே மாறிமாறி மனதுள் வந்தனர்.
அம்மாவும் அப்பாவும் இந்தவாரவிடுமுறைக்குள் எப்படியோ சமாதானமாகிவிடுவார்கள்.
ஆனால் அவன்.....?

அதேதெருவில் வசிக்கும் வேறுசில டனிஸ் பையன்கள் யதிக்கு காலைவணக்கம்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லியவாறு அவனுடன் சேர்ந்து நடக்கவிரும்பி அவனுக்காக தரித்துநின்றனர். யதி இருந்தமனநிலை எவருடனும் கதைக்க இடம்கொடுக்கவில்லை.

பதில் வணக்கம் சொல்லியவாறு அவர்களைத்தாண்டி நடந்தான். பாடசாலைக்குள் நுளைந்து வகுப்பறையை நோக்கி நடந்தபோது ஜோனாஸ் தனது அப்பா அம்மாவுடன் காரில் வந்திறங்கி பெட்டி படுக்கைகளை இறக்குவது தெரிந்தது.

அவனது பெற்றோர் "உனது சுற்றுலா நன்றாக அமையட்டும் அதை சந்தோசமாக அனுபவித்து வா" என்று ஜோனாசை கட்டித்தழுவி வழியனுப்பி வைப்பதும் தெரிந்தது.

யதி விறைத்து நின்றான். மனதில் ஏதோ ஒரு சிந்தனை புதிதாக வந்து குத்திட்டு நின்றது. தனது சூழலில் உள்ள இந்த இரண்டு உலகங்களைப்பற்றிய ஒரு புரியாத புதிராகவே அவனது சிந்தனை இப்போது இருந்தது.

வீட்டில் இருந்து கொண்டே ஆழுக்காள் எந்நேரமும் முரண்படும் தனது பெற்றோரும், பிரிந்து வாழ்ந்தாலும் குடும்பத்திற்குரிய கடமைகளைச் சரிவரச்செய்யும் ஜோனாசின் பெற்றோரும் இருவேறு துருவங்களாக அவனுக்கு தெரிந்தார்கள்.

அவன் வாழும் துருவத்தைவிட அவன் காண்கின்ற துருவத்தில் நடப்பது நல்லதாக மட்டுமே யதிக்கு இப்போது தெரிந்தது.

விறைத்து நின்றுகொண்டிருந்த யதியை அணைத்தவாறு நடந்துகொண்டிருந்தான் ஜோனாஸ்.

இருவரும் தங்கள் வகுப்பறையைநோக்கி சென்றனர். சுற்றுலாவால் வரும்போது ....." எப்படி சுற்றுலா நன்றாக இருந்ததா?" என்று யதியின் பெற்றோர் கேட்கத்தான் போகிறார்கள்.

"ஆமாம் நன்றாகவே இருந்தது" என்று அவனும் சொல்லத்தான் போகின்றான்.

●

## பார்த்தது

டென்மார்க்கின் ரி.வி.பொழுதுபோக்கு நிகழ்ச்சி ஒன்றில் ஒரு தாயாரும், அவரது குழந்தையொன்றும் கலந்துகொண்டனர். அந்தக் குழந்தையால் ஒரு வர்ணஓவியம் வரையப்பட்டது.

இறுதியில் அந்தத்தாயாரிடம் "உமது மகனால் வரையப்பட்ட இந்த ஓவியம் வேண்டுமா? அல்லது அந்த ஓவியத்தை நாம் சுக்குநூறாக கிழித்துவிட்டு அதற்குப்பதிலாக 5000 குரோன்கள் வேண்டுமா?" என அறிவிப்பாளரால் கேட்க்கப்பட்டது.

அந்தத்தாயார் சற்று யோசித்தவண்ணம் நிற்கிறார்.

"அண்மையில் நான் வரைந்த ஓவியங்களில் இப்போது நான் வரைந்ததே மிக அழகானது" என்று கூறிவிட்டு அந்த 5 வயதுப்பாலகன் தாயாரின் முடிவை ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

அந்தத்தாய் அந்தப் பணத்தை வாங்காது அந்த ஓவியத்தையே வாங்கவேண்டும் என்ற ஆவலுடன் நடப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அந்த ஓவியத்தை கிழித்துவிடுங்கள். எனக்கு 5000 குரோன்களே வேண்டுமென்கிறாள் அந்தத் தாய்.

ஓவியம் பேப்பர் அரைக்கும் இயந்திரத்துள் இட்டு சுக்குநூறாக கிழிக்கப்படுகிறது.

நாங்கள் ஆச்சரியத்தில் மூழ்கிப்போனோம். "அம்மா நீயாக இருந்திருந்தால் அந்த ஓவியத்தை அல்லவா வாங்கியிருப்பாய்." என்று எமது மகள் கேட்கிறாள்.

தலையாட்டுகிறோம் நாம்.

அதன்பின் அந்த அழகிய ஓவியத்தை வரைந்த அந்தப்பையனை ரி.வி த்திரையில் காட்டவேயில்லை.

தகவல்: ஒரு தமிழ்குடும்பம்.டென்மார்க்



படிப்பகம்


www.padippakam.com

# ஆந்திரே

டெனிஷ்கதை

தமிழில்: *செல்வன்.*

ஆந்திரே எங்கள் வீட்டிற்கு நீண்டகாலமாக வந்து போய்க்கொண்டிருந்தான். உடல்நலமில்லாமலிருந்ததால் என் சகோதரியால் பாடசாலைக்கு ஒழுங்காகக்போகமுடியவில்லை. பள்ளிக் கூடப்பாடங்களை விளங்கிக் கொள்வதில் அவளுக்குப் சிரமங்கள் ஏற்பட்டது. குறிப்பாக லத்தீன்பாடம் அவளுக்கு ஆகக் கடினமாக இருந்தது. எனவே லத்தீன் பாடத்தில் அவளுக்கு உதவுவதற்காக மாணவனாக விருந்த ஆந்திரே எங்கள் வீட்டிற்கு வர ஆரம்பித்தான்.



என் சகோதரி என்னைவிட இரண்டு வயது மூத்தவள். அவளை என்னால் நேசிக்கமுடியவில்லை. “உன்னை எனக்கு கட்டோடு பிடிக்கவில்லை“ என்று நான் ஒருமுறை கூறியதற்காக அம்மாவிடம் அடிவாங்கவேண்டிவந்தது. அப்போதும் நான் அழுதவண்ணம் அந்த வார்த்தைகளைச் சொல்லி என்னால் இயன்ற வரை மீண்டும்மீண்டும் உரத்துக்கத்தினேன் என் அம்மா “நீ ஒரு நல்ல பெண்பிள்ளை இல்லை“ என்று கூறினாள். அங்கே அம்மாவுக்குப் பக்கத்திலே நின்ற எனது சகோதரி இரக்கத்துடனும், கவலையுடனும் என்னை நோக்கினாள். நான் கதவை திறந்து கொண்டு ஓடினேன். அவ்வாறு நான் ஓடும்போது நீங்கள் அவளை அடித்திருக்கக்கூடாது என்று அவள் கூறுவது என் காதுகளில் விழுந்தது.

ஒரு நபர்; ஒருவரின் சகோதரி என்பதற்காக ஏன் கட்டாயம் அவரை நேசிக்கவேண்டும் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

எனக்கும் அன்று அடிவிழுந்த பின் நான் ஒருபோதும் சத்தமிட்டு கதைத்ததில்லை. எனக்குள்ளே மட்டும் நான் பேசிக்கொண்டேன். சில தடவைகள் அதுவும் இரவுப்பொழுதுகளில் சத்தமின்றி அவள் கட்டிலருகே சென்றதுண்டு. அவ்வேளைகளில் அவளையும் அவளது தலைமயிரையும் நிழலுருவம்போன்று என்னால் காணக்கூடியதாக இருக்கும்; அவளது மெல்லிய குறட்டையொலியை கேட்கக் கூடியதாக இருக்கும். ஏறக்குறைய இருளால் சூழப்பட்டிருக்கும் அந்த அறையில் அவள் கட்டிலருகே நின்றவாறு “நான் உன்னை வெறுக்கிறேன், நான் உன்னை அடியோடு வெறுக்கிறேன்“ என்று இரகசியக் குரலில் கூறிவிட்டு கட்டிலுக்கு திரும்புவேன். அதன்பின் என் கைகளுக்கிடையில் தலையணையை வைத்து அதற்குள் முகம் புதைத்து அழுவேன். அவளைப்போல நானும் நல்லவளாகவும் சினேகிதபாவத்துடன் அழகாகவும் இருக்கவேண்டும் என்று விரும்புவதுண்டு. இவை அவளிடம் இருப்பதால்



படிப்பகம்

www.padippakam.com

தானே அவளை நான் வெறுக்கிறேன். மேலும் அவர்கள் எப்போதும் அவளுடையவர்களாகவே இருந்தார்கள்.

என் சகோதரி என்னுடன் ஒருபோதும் ஆந்திரேயைப்பற்றி கதைத்ததில்லை. ஆனால் அவன் எங்கள் வீட்டுக்கு வரும் சமயங்களில் அவள் கண்களில் எத்தகைய மகிழ்வின் மின்னல்கள்! அந்த நாட்களில் தான் அவளை அதிகமாக வெறுத்தேன்.

"நானும் ஆந்திரேயுடன் சேர்ந்து லத்தீன் படிக்கக்கூடாதா?"என ஒருநாள் அப்பாவைக் கேட்டேன். அது தேவையற்ற செலவு என்றும், எனக்கு படிப்பதற்கு மேலதிக உதவி தேவையில்லை என்றும், அத்துடன் எலிசபெத்தின் படிப்பு நீண்டகாலம் தொடரப் போவதில்லை என்றும் அப்பா சிரித்துக் கொண்டே பதிலளித்தார். அதற்குப் பின் அது தொடர்பாக நாங்கள் கதைக்கவில்லை.

ஆந்திரேபற்றிய கனவுகளால் அடிக்கடி காலை வேளைகளில் திடுக்கிட்டு கண்விழித்தேன். எல்லாம் தொடர்ந்து முரண்பாடாகவே நடந்து கொண்டிருந்தது. ஏனெனில் நான் பெரும்பாலான நேரங்களில் ஆந்திரேயைப் பற்றியே நினைத்தேன். ஆனால் அவன் எலிசபெத்துடன் படிப்பதற்கு மட்டுமே வந்து கொண்டிருந்தான்.

ஆந்திரே இங்கு வருவதற்கு முன்னர் அவளின் வகுப்பு மாணவர்கள் அவளிடம் வருவதும், அவர்களுடன் சினிமாவுக்கோ பலே நடனத்திற்கு போவது வழக்கம். நான் ஒருபோதும் பலே நடனத்துக்கு சென்றது கிடையாது. அத்துடன் சினிமாவுக்கு போவது என்றாலும் அம்மாவுடன் அல்லது தனியாகவோதான் சென்றுவருவது வழக்கம். ஆனால் ஆந்திரே வர ஆரம்பித்தபின் எலிசபெத் தன் வகுப்பு மாணவர்களுடன் வெளியேயெல்லாம் அதிகளவில் போவது கிடையாது. அவர்களின் தொலைபேசியழைப்பு வந்தாலும் தனக்கு ஏதாவது வேலையிருப்பதாகக் கூறி நாகரீகமாக மறுத்து விடுவாள்.

"ஏன் இப்போ ஒருவரும் ஓரிடமும் உன்னை வந்து கூட்டிப் போவதில்லை?" என்று படுக்கைக்குப் போகும்போது அவளைக் கேட்டேன்.

"எங்கே போகவும் எனக்கு இப்ப நேரம் இல்லை" அவள் பதிலளித்தாள்.

"பொய் சொல்லுகிறாய்" என்று நான் உரத்துக் கூறினேன்.

"நீ ஆந்திரேயை விரும்புகிறாய், அதுதான் நீ எப்பவும் அவனுக்காக காத்துக்கொண்டிருக்கிறாய்"

"நீ உன்னுடைய அலுவலைப்பார், அவன் உன்னுடன் ஏதாவது சோலிக்கு வந்தவனா?"

அது என்னவோ ஆச்சரியமான உண்மைதான். நான் அவனை பார்ப்பதற்கும் அவனுடன் பேசுவதற்கும் எவ்வளவோ ஆவலுடன் அவன் வரும் நேரங்களில் காத்துக்கொண்டிருபேன். ஆனால் அவன் நான் இருக்கும் பக்கத்திற்கு கூடவந்தது இல்லை. அவர்கள் இருவரும் சேர்ந்து வரவேற்பறையில் படிப்பார்கள். நான் வீட்டுப்படிகளில் உட்கார்ந்து கொண்டு வாசித்துக் கொண்டிருப்பேன். ஆனால் நினைவுகளில் மட்டும் ஆந்திரே இருப்பான். அன்று ஒருநாள் அவர்கள் இருந்த அறைக்குள் எனது பொருளொன்றை எடுக்கவேண்டிவந்தது.

நான் அறைக்குள் போனபோது அந்தச்சிறிய மேசையில் போடப் பட்டிருக்கும் தத்தம் கதிரையில் இருந்தார் கள். எலிசபெத் மொழிபெயர்த்துக் கொண்டி ருந்தாள். இடையில் அவன் எழுந்துவந்து அவளது புத்தகத்தைப் பார்வையிட்டான். அத்துடன் அவளுடன் பேச்சுக்கொடுத்தவாறே அவளை ஒரு விதமாகப் பார்த்துக் கொண்டி ருந்தான். அப்பொழுது ஏதோ விபரிக்கமுடி யாத ஒரு கவலைவந்து எனது தொண்டை யை அடைக்கத் கொண்டது.



படிப்பகம்

www.padippakam.com

ஆந்திரே அவளை முதற் தடவையாக வெளியே கூட்டிச்செல்ல அழைத்தான். அவள் அடைந்த மனமகிழ்வை பார்க்கும்போது எனக்கு மூச்சுத் திணறுவது போல் ஒரு உணர்வு ஏற்பட்டது. அவளுடைய கவனம் முழுவதும் அவனுடன் போகும்போது எந்த ஆடையை அணிவது, எவ்வாறு நடந்து கொள்ளுவது என்பதிலேயே இருந்தது. அவள் அதுபற்றி அம்மாவுடன் நிறைய அலட்டிக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் என்னுடன் எதுவும் கதைக்கவில்லை. நானும் அதுபற்றி அறிந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அன்று இரவு விடிவதற்கு முன்னால் விழிப்பு வந்துவிட்டது. எழுந்து அருகில் இருக்கும் அலுமாரியைத் திறந்து பார்த்தேன். அங்கே அவளின் மெல்லிய நீலநிறமான ஒரு சட்டை இருந்தது. அது அவளுக்கு அழகாகவும் அளவாகவும் இருக்கும். அதை பார்த்த போது ஆந்திரேயின் நினைவு வந்தது. அத்துடன் அவளின் மகிழ்வினை சிதறடிக்க ஒரு மார்க்கமும் தோன்றியது.

அடுத்த நாள்! அவள் இன்னும் பாடசாலை யிலிருந்து வீட்டிற்கு வரவில்லை. நான் உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைக்குள் நுழைந்தேன். பொரித்த எண்ணைய் ஒரு சட்டியில் ஊற்றி வைக்கப் பட்டிருந்தது. என் இரண்டு விரல்களையும் அந்தக்கரி எண்ணையில் பிரட்டிக்கொண் டேன்பின் படுக்கையறைக்கு வந்து அலுமாரி யைத் திறந்தேன்....

அன்று மாலைதான் ஆந்திரே அவளை வெளியே அழைத்துச் செல்வதாகவிருந்தது. நான் வீட்டுப்படிகளில் உட்கார்ந்திருந்தேன். அவன் ஒழுங்கையில் வரும்போதே அவனை என்னால் பார்க்கக்கூடியதாக இருந்தது. அவன் வந்ததும் நான் மாலை வணக்கம் சொன்னேன்.

எலிசபெத் இன்னும் அந்த எண்ணைய் கறை யைக் காணவில்லை. அது சட்டையின் பின் பக்கமாக இருந்ததால் காண முடியாமல் போயிருக்கலாம். இப்போது குசினியின் கதவு திறக்கப்படுகின்றது. அவள் அம்மாவுடன் நிற்கிறாள். அப்போது அம்மா தான் கூறினார்.

"என்ன பிள்ளை, சட்டையில் எண்ணெய் கறைபட்டிருக்கு"

"எங்கே அம்மா" என்று எலிசபெத் கேட்பது கேட்டது.

"இப்ப என்ன செய்யுறது" ஏறக்குறைய அழுதவாறே வினாவினாள். அவளின் அழுகைச் சத்தத்தைக் கேட்டபோது என் மனதிற்கு மிகவும் இதமாக இருந்தது.

காரின் "என்று அம்மா உரக்கக் கூப்பிட்டு குளியல் அறைக்குள் ரின்னில் இருக்கும் திரவத்தை விரைவாக எடுத்து வருமாறு கூறினாள். நான் எழுந்து மெதுவாக அதை எடுத்துவந்து கொடுத்தேன்.

"நன்றி"சொல்லிப் பெற்றுக் கொண்ட அம்மா, கறையை அகற்றுவதற்காக அத்திரவத்தை சட்டையில் ஊற்றித் தேய்த்தாள். ஆனால் முழுக்கறையையும் அகற்ற முடியவில்லை.

எலிசபெத்திடம் அந்தச் சட்டையைத் தவிர வேறு நல்லசட்டை அப்போது இருக்க வில்லை. எனவே கறைப்பட்ட அந்தச் சட்டையையே அணிந்து கொண்டு செல்ல வேண்டியிருந்தது.

ஆந்திரே எலிசபெத்தினை அதன்பின் அதிக தடவைகள் வெளியே அழைத்துச்செல்ல வில்லை. அவன் எங்கள் வீட்டிற்கு வாரமிரு தடவைகள் வருவான். அவன் வந்தால் ஒரு மணிநேரம் எலிசபெத்துடன் சேர்ந்துபடிப்பான். அத்துடன் ஒவ்வொரு மாத முதல் திகதி களிலும் பின்னேரங்களில் வந்து காபி அருந்தி விட்டு படிப்பிப்பதற்கான பணத்தையும் வாங்கிச் செல்வான்.


(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

**மலர்தல்**
**வாடல்**
**தெரிதல்** ———————————— **பூமி**



'வித்தியாசங்களுடனேயே உலகம்–இதில்
ஒருவாறு ஒத்திருப்பவை குழுக்கள்.
முற்றத்தில் ஊர்ந்துகொண்டிருக்கும்
எறும்புகளிடையே அகப்பட்ட
ஒரு
தேங்காய்ப்பூப்போல.........ஒரு மனிதன்
மலர்ந்தும்
வாடியும்
ஞானித்தும் கொண்ட.....
ஒரு ஈழத்து அகதியின்
வடதுருவ அனுபவங்கள்.'

டென்மார்க்கில் பாலர் பராமரிப்பு நிலையம் ஒன்று.
ஒருநாள் நான் எனது மகனை அழைத்து வருவதற்காகச் சென்று கொண்டிருந்தேன்.
என்னோடு சேர்ந்து ஒரு டனிஷ் அம்மாவும் வந்து கொண்டிருந்தாள்.
அவளுடைய குழந்தையும் அங்குதான் பராமரிக்கப்பட்டு வந்தது.
நானும் அவளும் கதைத்தபடியே நடந்து கொண்டிருக்கிறோம்.
நீ விலையுயர்ந்த ஆடைகளை அணிகிறாய் என என்னை வியந்தாள்.
கூச்சத்தோடு எனது ஆடைகளை தொட்டுச்சரி செய்தபடி சேர்ந்து நடக்கிறேன்.

"நீயோ வறுமை நிறைந்த ஒரு நாட்டிலிருந்தல்லவா வந்தவன். ஆனாலும் நீ இங்கு டென்மார்க்கில் வசதியாக வாழ்கிறாய் என நினைக்கிறேன்" என்றாள் தொடர்ந்து ஒரு குத்துப் பார்வையுடன்.

"உங்களுடன் ஒப்பிட்டு நோக்கும்போது பொருளாதாரத்தில் எமது நாடு வறுமையுள்ளதாக தோன்றலாம். ஆனால் எமது நாட்டை தனித்துவமாக எடுத்துப் பார்த்தால் பல விடயங்களில் நாங்கள் நல்ல வாழ்வு வாழ்பவர்களாகக் காணலாம்" என்றேன் நான்.

அவளது வெள்ளை முகம் சிவந்துப் பின் கறுத்தது.

காரும், சொந்தவீடுமில்லாத அந்த நடுத்தரவர்க்க டனிஷ் குடும்பத்தாயின் தேவைகளும்,



படிப்பகம்

www.padippakam.com

ஏக்கங்களும், அதன்வழிவரும் என்மீதான அவளது அபிப்பிராயங்களும் எனக்கு புரிந்தது தான்.

இத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டோம். பொழிந்து கொண்டிருக்கும் வெண்பனியை சபித்தபடி அப்பாலர் நிலையத்துள்ள் நுழைகிறேன்.

அங்கே குழந்தைகள் கூட்டமாக இருந்து விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.
வெடித்துப் பறக்கும் எருக்கலம் பஞ்சுபோல தலைமுடியோடு உருண்டு, திரண்ட டனிஷ் வெள்ளைக்குழந்தைகளின் நடுவே ஒரு வெள்ளைமாதுவின் நெற்றியில் காணும் கறுப்புத் திலகம் போல 'மரியா' இருந்தாள்.

மரியா இந்தியாவிலிருந்து தத்தெடுக்கப்பட்டு வளர்ந்துவரும் ஒரு குழந்தை.
அழகான சுருள்சுருளாக கறுப்புக்கேசம்.
துருதுருக்கும் கண்கள்.
அவளின் ஆடைக்கு வெளியே இப்பொழுதும் துரத்திக்கிடக்கும் எலும்புகள்.
அவர்களது விளையாட்டை பார்த்தபடி நிற்கிறோம்.

"எங்களிடம் இரண்டு மரியாக்கள் இருக்கிறார்கள். ஒருத்தி கறுப்பானவள், மற்றவள் வெள்ளை. இது ஏன்?" என்று வினா எழுப்புகிறது ஒரு குழந்தை.

எல்லோருமாக யோசிக்கிறார்கள்.
பதிலேதும் அங்கு வரவில்லை.
ஆனால் எல்லோரும் இதுபற்றியே யோசிக்கிறார்கள்.
கறுப்பு மரியா
வெள்ளை மரியா
ஏன்....? எப்படி.....?

இதை அவதானித்த அந்நிலையப் பொறுப்பாளர் ஒருவர் "அது ஏனென்றால்....." என்றபடி விளக்கமளிக்க வருகிறார்.

திடீரென ஒரு வெண்குழந்தை பதில் சொல்லிற்று.
"எனக்குத் தெரியும்
எங்களிடம் இரண்டு மரியாக்கள்
ஒருத்தி கறுப்பு........ கொக்கோ ஐஸ் மாதிரி
அடுத்த மரியா........ அவள் வனிலா ஐஸ் போல" என்று வாய்விட்டுச் சிரித்தாள்.

பார்த்துக் கொண்டு நின்ற எல்லோரும் சிரிக்கிறோம்.
என்னோடு கூட வந்தவளும் சிரிக்கிறாள்.

இந்தக் குழந்தைகள் உலகம் பற்றி நினைத்து மலர்ந்தேன்.
ஒரு மூலையில் தனித்து விளையாடிக் கொண்டிருந்த எனது மகனை அழைத்துக் கொண்டு வீடு நோக்கினேன்.
பனி இப்பொழுதும் பொழிந்து கொண்டிருந்தது.

---



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றுக்கு ஒரு கடிதம். இல : 02

# திசைவீரசிங்கம் மாஸ்டர்.

கே. எஸ். துரை

**கரைபுரண்டோடும் காலப் பெருவெள்ளத்தில் மனிதவாழ்வு சின்னஞ் சிறிய திவலைகளாகும். இத்தொடர் வரலாற்றின் வரவு செலவு ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிராத சாதாரண மனிதர்களைப் பற்றியே பேசுகிறது. குழந்தைகள் சிறப்பிதழில் ஒரு ஆசிரியரின் வாழ்வை எடுத்துரைக்கும்போது ஒரு கலை அமைதி இயல்போடு தவழ்ந்துவரக் காண்கிறேன்.**

இவரை என்னால் என்றுமே மறக்க முடிவதில்லை. நினைத்துவிட்டால் போதும் ஓடிவரும் நீரலைகள் எண்ணங்களை எங்கோ அடித்துச் சென்றுவிடுகின்றன.

மனிதர்களே இல்லாத ஒரு பூமியில் நின்று, கடமை உணர்வுமிக்க இந்த ஆசிரியருக்காக ஓவென்று அழவேண்டும் போல ஆத்மம் மயிர்க் கூச்செறியும்.

திசைவீரசிங்கம் மாஸ்டர் —

மேர்க்குரி விளக்குப் போட்டது போல கண்களைப் பெயர்த்தெடுத்துவிடும் வெள்ளை வேஷ்டி நாஷனல், கையில் ஒரு குடைக்கம்பு, ஆஜானுபாகுவான தோற்றம், அறிவின் கதிர்ப்பால் மயிர்களை இழந்துபோன வெண்தலை, குழைத்துத் தீட்டிய முத்துப் போல கருந்தேகம் : அதன் மறுபக்கமாக உள்ளமெல்லாம் பால்போல ... இதுதான் அவரின் தோற்றம்.

வாயைத் திறந்தால் ஆங்கிலம் நுங்கும் நுரையுமாகப் பிரவாகம் பண்ணும். ஆழ்ந்து, அகன்று, நுனித்துப் போன ஆங்கிலச் சமுத்திரம்.

சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பாக —

மூன்றாம் வகுப்பை முடித்துக்கொண்டு, சிதம்பராக்கல்லூரிக்குள் தயங்கித் தயங்கிப் போனபோது இவரை முதன் முதலாகக் கண்டேன்.

எமது பாடசாலைக்கு இன்னொரு பெயர் இங்கிலீஸ் பள்ளிக்கூடம். அங்கு : அக்காலத்தில் : அவர் தலைசிறந்த ஆங்கில ஆசிரியர் என்பதைப் பேசாத வாய்களே கிடையாது.

ஆசிரியர்களில் இரண்டு தட்டுக்கள் உண்டு. ஒன்று வகுப்பறையில் மட்டும் ஆசிரியர்களாக இருப்பவர்கள். இரண்டு வாழ்க்கை முழுவதையுமே ஆசிரியராக வாழ்ந்து முடிப்பவர்கள். இதில் திசைவீரசிங்கம் மாஸ்டர் இரண்டாவது ரகம். ஆகவேதான் திசையப்பு வாத்தியார் திருவடிகள் பட்ட தெருவெல்லாம் இப்பொழுதும் தங்கமயமாய்த் தெரிகிறது.

கல்லூரி ஆரம்பிப்பதற்கு பதினைந்து நிமிடங்களுக்கு முன்னதாகவே ஆசிரியர் மண்டபத்தில், "டாண் !" என்று ஆஜராகியிருப்பார். "ஒரு நிமிடம் தாமதமாகிவிட்டது! மன்னித்துக் கொள்ளுங்கள் !" என்ற வார்த்தையை யார் முன்பாவது பிரயோகித்து; என்றுமே தன்னை அசிங்கப் படுத்திக்கொள்ளாத மனிதர்.

அவரின் வீட்டுக்கு முகவரி மணிக்கம்பி தோட்டம். சிதம்பராக்கல்லூரிக்கும் அதற்கும் இடைத்தூரம் ஐந்து கி. மீ. க்கு மேல்வரும். பேருந்தையோ, மிதிவண்டியையோ தீண்டியும் பார்க்காது கைகளை ஓங்கி வீசியபடியே எங்கும் எப்பொழுதும் நடந்தே வருவார்: போவார். மிதிவண்டிகளிலும், கார்களிலும் ஏறிவந்து, அவரிடம் தாமதத்திற்காக வருந்திக்கொள்வோர் பலர்.



படிப்பகம்

www.padippakam.com

இனி .... இந்த மனிதர் ஒருநாளாவது லீவெடுக்கமாட்டாரா? ஒரு பாடநேரத்திலாவது நாம் ஓய்வாக இருக்கலாமே ? என்று மாணவர்கள் அங்கலாய்ப்பார்கள் ; நானும்தான். அப்படி ஒரு ஓய்வான பாடம் கிடைக்குமாவென்று பதின்மூன்று வருடங்களாகத் தொடர்ந்து காத்திருந்தோம். பதவியிலிருந்து ஓய்வெடுக்கும் கடைசித் தினத்தில்கூட அவர் எங்களுக்கு அந்தச் சந்தர்ப்பத்தைத் தரவேயில்லை.

இதனாலும் , வேறு காரணங்களாலும் நிறைய மாணவர்களுக்கு இவர்மீது கோபம் ....

அடக்கமுடியாத சிலர், தெருவில் போகும்போது, " கூய் .. திசையப்பா !! " என்று குரல் வைத்துவிட்டு ஓடி மறைவார்கள்.

அந்த நண்பர்களிடம், " ஏன் இப்படி ?" என்று விசாரித்துப் பார்த்தேன். " எங்களையெல்லாம் தினம் ஒரு பட்டப்பெயரைச் சொல்லி வைதுவிடுகிறார். அதுவே தமது கோபமெனச் சிலர் பொரிந்து தள்ளினார்கள்.

ஆம் ... அது உண்மைதான் —

வகுப்பில் பராக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர்களைக் கண்டால் மக்மில்லன் ... எடிட்டர் ... கீற்ஸ் ... என்றெல்லாம் தொடங்கி, வெங்காயம், பிஞ்சுமிளகாய், பூசினி, புடோல், வெண்டி, விளக்குமாத்துக்குஞ்சம் , இல்லிக்குடம், நெய்யரி என்பதுவரை பல பெயர்களால் பூசைவைப்பார். இதனால் மாணவர்கள் பலருக்குக் கடும் விசனம்.

அவரிடமே கேட்டுவிட வேண்டுமெனப் பல பொழுதுகள் நினைப்பதுண்டு ... பயப் பிராந்தியினால் கேட்பதில்லை. நானும் ஆசிரியராக வந்தபின்பே ஒருநாள் அதுபற்றி விசாரித்தேன். சிரித்தபடியே சொன்னார். ஆச்சர்யமாக இருந்தது.

" தண்டனையாலும் மாணவர்கள் முன்னேற்றம் பெறவேண்டும் ... கீற்ஸ் என்று ஒரு மாணவனைத் திட்டினால் அவன் அன்று மாலையே கீற்ஸ் என்ற கவிஞரைப் பற்றி ஆதியோடந்தமாக அறிந்துவிடுகிறானே ? இதைவிடச் சிறந்த படிப்பு ஏதாவது இருக்கிறதா ..? " என்று கேட்டார்.

நெய்யரி என்றால் பன்னாடை. அது நல்ல விடயங்களை வடியவிட்டுவிட்டுக் கழிவுகளை மட்டுமே சேகரிக்கும். " நெய்யரி " என்ற சொல்லை நினைத்தாலே போதும். மனதிலிருக்கும் கழிவு எண்ணங்களை வழித்தெறிந்துவிடுகிறோமே ? என்பதை அவரின் பழைய மாணவர்கள் சிலரும் என்னிடம் கூறியுள்ளார்கள்.

அந்த நாட்களில் எங்கள் ஊரில் வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது. ஒரு நாளிலேயே இலட்சாதிபதிகளானவர்கள் நிறையப் பேர்களுண்டு .

செல்வம் கரை புரண்டோடிய காலம் .. பணக் கற்றைகளைத் தூக்கமுடியாது பலர் சில்லுச் சூட்கேஸ்களில் அடைந்தே இழுத்துச் செல்வார்கள்.

சோமசெற்கார், நெற்றியில் அப்பிய திருநீற்றுப் பட்டை , இரட்டைவடம் சங்கிலி, இருபது வயதிற்குள்ளேயே பிள்ளையும், பிள்ளையார் தொந்திகளுமாகச் சில மாணவர்கள் உயர்வு பெற்றனர். இவர்கள் எமக்கு மூத்த மேல் வகுப்பு மாணவர்கள்.

பாடசாலைப் புத்தகங்களோடு மாரடிப்போருக்கு இவர்களைப் பார்த்ததும் மெல்லிய பொறாமை. தாம் தொடர்ந்தும் படிக்க வேண்டுமா ? என்பதே அவர்களின் வருத்தமாயிருக்கும் கவலை கொண்டோரை யெல்லாம் கூட்டிச் சென்று நறுவிசாகக் கருத்துரைத்தார்.

ஆசிரியர்களைப் போலவே மாணவர்களின் வாழ்க்கையையும் இரண்டாகப் பாத்தி கட்டலாம். ஒன்று கொஞ்சம் தெரியும் பிரிவு. இரண்டு அதிகம் தெரியும் பிரிவு. கொஞ்சமாகத் தெரியும்போது எல்லாவற்றையுமே தெரிந்துவிட்டோம்! என்ற முடிவுக்கு வந்துவிடும் ஆபத்துண்டு. அதையே நம்பிவிடும் மாணவர்கள் பாடசாலையில் இருப்பதுமில்லை. அதிகமாகத் தெரியும்போதுதான் தமக்கு ஒன்றுமே தெரியாது! என்ற உண்மை



படிப்பகம்

www.padippakam.com

தெரியவரும். அது தெரிந்துவிட்டால் சாகும்வரை அவர்கள் படிப்பை நிறுத்துவதுமில்லை.

எங்களுக்கு அன்றைய வகுப்பு புதிதாக எழுதப்பட்ட பைபிள் போலத் தெரிந்தது. தேனில் ஒட்டிய தும்பிகளாய் கிடந்தோம். மயங்கிக் கிடந்த எம்மீது சில கேள்விகளைத் தூக்கி வீசினார்.

" பணத்தை உருவாக்கியது யார் ? "
" மனிதர்கள் ! "
" பணத்தால் வாங்கப்படும் பொருட்களை உருவாக்குவது யார் ? "
" அதுவும் மனிதர்களே ! "
" பிறகெதற்காக பணத்தைத் தர வேண்டுமென கடவுளிடம் மன்றாடுகிறீர்கள் ? "
" ........................ "

" சகல பிரச்சனைகளையும் தோற்றுவித்தது மனித அறிவே ! அதன் சகல சிக்கல்களுக்குமான தீர்வும் அதற்குள்ளேயே மறைந்து கிடக்கிறது ! முள்ளை எடுப்பதே முள்வாங்கிதானே ? கடவுளை ஒரு போதும் முள்ளாகக்காணாதீர்கள் ! " என்றார்.

" ஓர் ஏழை ஆசிரியர் தனது ஆற்றாமையை இதைவிட வேறெந்த வழியில் வெளிப்படுத்தப் போகிறார் ? " மனம் சொற்ப நேரத்திலேயே வேதாளமாய்ப் பாய்ந்து, முருங்கை மரத்தில் ஏறி உட்கார்ந்துவிடும்.

எங்கள் வேதாள மனங்கள் எங்கெங்கு போகின்றனவோ ? அங்கெல்லாம் அவரும் கணப்பொழுதிலேயே வந்து சேர்ந்துவிடுவார். எப்படி ?

ஆசிரியர் பணியில் மாணவர்களுக்குக் கற்பிப்பது ஐம்பது விழுக்காடு. மாணவர்கள் மனதைப் படித்தறிவது ஐம்பது விழுக்காடு. இதுவே சிறந்த கற்பித்தலுக்கான இலக்கணம்.

சொற்ப நேரத்தில், " நீங்கள் நினைப்பது தவறு! நானும் ஒரு இலட்சாதிபதியே ! " என்றார். அந்த வார்த்தையில் எங்கள் மனங்களை அவர் வாசித்துவிட்டது தெரிந்தது. போயும் போயும் பொடிநடையில் வரும் இவரா இலட்சாதிபதி ? நம்புவதற்குத் தயங்கினோம் ....

மாலையில் எல்லோரையும் அழைத்துச் சென்று தனது காணியைக் காட்டினார். மிகப் பெரிய நிலப்பரப்பு ! அதன் அப்போதைய பெறுமதி பல இலட்சங்களைச் சுத்தமாகத் தாண்டும்.

முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் தனது முதல் சம்பளத்தில் 85 ரூபாவிற்கு வாங்கிவிட்ட காணித்துண்டு என்று கூறினார்.

பணம் என்பதும் அறிவுதான்! என்பதை அன்று அவரிடம்தான் கற்றுக் கொண்டேன்.

இவர் கடவுள் நம்பிக்கை உடையவராக இருந்தும், சமூகத்தின் ஈரல் குலையை இடுக்கிப் பிடித்துவிடும் கருத்துக்களைக் கூறியமையால் இவர் ஒரு சோசலிசவாதியென ஒரங்கட்டியோரும் உண்டு.

அதன் காரணமாக "அவருடைய ஆங்கிலமோ மிகக் கடுமையானது. அவர் கூறும் கருத்துக்களும் எமக்கு விளங்குவதாயில்லை! " என இன்றும் பலர் கூறக் கேட்கிறேன்.

இதற்கும் ஒருநாள் விளக்கம் தந்தார் —

" மனிதன் கருத்துக்களால் மாளிகை கட்டி வாழ்பவன். ஆனால் கருத்துக்களோ நாளும் நாளும் புதியவை! புதிய விடயங்களால் தமது பழைய மாளிகை அத்திவாரத்தோடு இடிந்து விழுந்துவிடுமென்று அஞ்சும்போது, அவன் தனக்கு விளங்கவில்லை! அல்லது இக்கருத்தானது மக்களுக்கு விளங்கவில்லை! என்னும் போர்வையால் தனது பழைய மாளிகையை மூடிக் கொள்வான் ! "

விளங்கவில்லையென்பதே ஒரு கருத்து புதிதானது என்பதை நாம் அறிந்துகொள்ள சிறந்த உரைகல்லாகும் . விளங்கியதை மீண்டும் ஏன் கூறவேண்டும் என்றும் கேட்டார்.

தாய் நாட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான மைல்கள் தாண்டிவந்து, விளங்காத பாஷைகளை விளங்கி : அன்னிய வாழ்க்கையைப் புரிந்து, மேலைத் தேயத்தவருக்கே தண்ணி காட்டுபவர் நாங்கள் என்று



படிப்பகம்

www.padippakam.com

மகிழ்ந்து போய்விடும் நாம் சில வேளை சின்னச் சின்னத் தமிழ்க் கருத்துக்களைக் கூட மக்களுக்கு விளங்காதெனப் பேசிக் கொள்கிறோமே ? அதையும் ஐரோப்பிய நாடுகளில் நின்று —

இதன் சூட்சுமத்தை என்றோ நமக்கெல்லாம் விண்டுரைத்தவர் திசைவீரசிங்கம் மாஸ்டர்தான்.

இப்படி அறிவும் , அன்பும் , ஆனந்தமுமே வடிவான அவரால் நாம் சிரித்த, சிந்தித்த பொழுதுகள் ஏராளம். ஆனால் அவருக்காகவும் ஒரு நாள் அழவேண்டி வந்தது.

1985 ல் ஒரு அதிகாலை —

சிங்கள இராணுவத்தினர் எங்கள் பிரதேசத்தை சுற்றி வளைத்து, சுட்டும், வெட்டியும் 90 அப்பாவிகளை துடிக்கத் துடிக்கக் கொன்றார்கள். அன்று அவரின் வீட்டிற்கு அருகில் நானும் உயிருக்காகப் பதுங்கியிருந்தேன்.

ஒரு சிறுவன்; விபரமறியாத விடலைப் பருவம். எங்கிருந்தோ ஓடிவந்து, மாஸ்டரின் வீட்டிற்குள் அடைக்கலம் புகுந்தான். அவனைத் துரத்தி வந்த இராணுவமும் மின்னல் வேகத்தில் அதே வீட்டிற்குள் பாய்ந்தது.

" யார் இந்தச் சிறுவன் ? உன் உறவினனா?" சிங்களத்தில் கூச்சலிட்டார்கள்.

திடுக்கிடும் கணங்கள் ......

உறவினன் என்று சொல்லலாமா ? அப்படிச் சொன்னால் பொய் சொன்ன குற்றத்திற்காக சிறுவனைக் கொன்றுவிட்டால் ..?

" உறவினன் இல்லை ! ஆனால் தெரிந்த பையன் ! " சத்தியத்தையே பேசினார்.

அக்கணமே ஒரு ஆமிக்காரன் கையிலிருந்த பளிச்சிடும் கண்ட கோடரியால் சிறுவனின் உச்சந்தலையில், " சதக் ! " கென ஒரு போடு போட்டான். அவ்வளவுதான் .. சிறுவன் மூளை சிதறி ஸ்தலத்திலேயே துடிதுடித்து உயிர்விட்டான்.

அந்தக் கொடுமையைப் பார்த்தபின் மாஸ்டர் இந்த உலகில் அதிக தினங்கள் வாழவில்லை. "தமிழீழ மண்ணிலிருந்து சிங்கள இராணுவம் முற்றாக அகற்றப்பட வேண்டும் ! " இதுவே அவர் ஆத்மம் சொன்ன கடைசிச் செய்தியென்று பின்னாளில் சில நண்பர்கள் மூலமாக அறிந்தேன்.

எனக்கொரு கவலை —

ஆசிரியத் தொழிலே கடமையாகி, அறிவுச் சுடரால் ஊனினை உருக்கி, மாணவரிடையே உள்ளொளி பெருக்கிய இந்த ஆசிரிய விளக்கு இடையில் அணைந்திருக்கக் கூடாது.

சிங்கள இராணுவம் இப்பொழுது நமது மண்ணின் பெரும் பகுதியில் இல்லை. தமிழீழ விடுப்பு வேள்வியில் ஈடுபட்டுள்ள வேங்கையரில் பலர் இவரின் மாணவர்களே ! இவர்களில் தமிழீழத் தேசியத் தலைவரும் ஒருவர்.

" பல நூற்றாண்டுகளாக அடிமைப் பட்டுக் கிடந்த ஒரு இனத்தை மீட்டெடுக்கும் வரலாற்றுக் கடமையை நிகழ்துவோருக்கு நானும் ஆசிரியராக இருக்கும் பேறு பெற்றேனே! " என்ற பெருமையை விட ஒரு ஆசிரியருக்கு வாழ்வில் வேறென்ன நிறைவு வேண்டும் ..?

இந்த வீரயுகத்தில் வாழ்ந்த ஆசிரியர். என்ற மனநிறைவோடு அவர் கண்களை மூடியிருந்தால் நான் அவருக்காக அழுதிருக்கமாட்டேன்.

ஏனென்றால் தன் மாணவர்கள் பெறும் உயர்வில் தன் உயர்வைக் கண்டு மகிழ்பவன் நல்லாசிரியனல்லவா ? இவர் போன்ற ஆசிரியப் பெருந்தகைகளால் நிறைந்ததே நமது தாயகம் . இக் கதைகளை எனது டெனிஸ் ஆசிரிய நண்பர்களுக்கும் கூறுவேன்; பரவசப்பட்டு விடுவார்கள். கைவீசி நடக்கும் அவரின் கடமை உணர்விலிருந்து, இன்றைய இளைஞர் கற்றுக்கொள்ள நிறையவே இருக்கிறது.

( தொடர்ந்தும் வரும் )



படிப்பகம்

www.padippakam.com


# எனது நினைவில் எனது கிராமம்

மேனகா தனபாலசிங்கம்

மார்கழி மாதம் ஒரு புதன்கிழமை:
நான் எனது அழகான கிராமத்தைவிட்டு பிரியும் நேரம் வந்துவிட்டது. எனக்கு அப்போது 11 வயது. அன்று கண்ட காட்சிகள் அனைத்தும் இப்பொழுதும் எனது மனதில் அழியாமல் இருக்கின்றன. பாடசாலை விடுமுறை விட்டிருந்தது. அதனால் நான் வெளிநாடு செல்லும் விடயம் என் சினேகிதர்கள் யாருக்கும் தெரியாது. நான் அவர்களுக்கு கூறவுமில்லை. அதனால் சற்றுக் கவலையாக இருந்தேன்.

நான் பயணம் செல்வதற்கு முதல்நாள் நம் ஊர் கோவில்களுக்கெல்லாம் சென்று கற்பூரம் கொழுத்தி கும்பிட்டேன். எனக்கு ஒருபக்கம் மிகமிக கவலையாக இருந்தது; என் கிராமத்தை விட்டுப்போக, என் சொந்தக்காரர்களை பிரிந்துபோக. ஆனால் மறுபக்கம் சந்தோசமாகவும் இருந்தது. ஏனென்றால் பலவருடங்களுக்குப் பிறகு என் தந்தையாரைச் சந்திக்கு போகிறேன் என்பதனால்.

புகையிரதநிலையத்திற்கு செல்வதற்கு நேரம் கிட்டகிட்ட என் உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கி விட்டது; அத்துடன் பயமாகவும் இருந்தது; அழுகையும் வந்துவிட்டது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. உடனே நான் கேற் பக்கம் ஓடிச்சென்று வெளியே பார்த்தேன்.
வீட்டிற்கு முன் வாழைமரங்கள் குலைகள் போட்டு தொங்கிக்கொண்டிருந்தது. நெற்கள் கதிர்விட்டு பச்சைப்பசேலென காற்றிற்கு ஆடி அசைந்தன. தென்னைமரங்கள் தேங்காய்க் குலைகளை பாரத்தால் சுமக்கமுடியாதது போல காற்றிற்கு மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. மாமரத்தில் மாங்காய்கள் தொங்கிக் கொண்டிருந்தன. மாமரத்தின் முதல் கொப்பில் சில சேவல்கள் இருந்து கொண்டு போய் வா! போய் வா! என்று



கூறுவதுபோல கூவின. கோயிலில் இருந்து மணியோசை கேட்டது. அதைக் கேட்டபோது கடவுளே போய்வா என ஆசிர்வதிப்பதுபோல இருந்தது. குருவிகள் எல்லாம் இனிமையான ஓசையில் பாடிக் கொண்டிருந்தன. இக் காட்சிகளைக் கண்டவுடன் என்மனம் குளிர்ந்து போய்விட்டது. ஆனால் சற்று நேரத்தில் கிராமத்தையே விட்டுப் பிரியப்போகிறோம் என்று நினைத்ததும் நான் வருந்தினேன். எனக்குள் அழுதுகொண்டேன்.

அப்பொழுது நான் நினைத்தேன். உலகத்திலே எனது கிராமத்தைப் போல ஓர் அழகான கிராமம் இருக்குமா? நாம் எவ்வளவு வசதி படைத்த வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், நம் தாய்நாட்டில் ஓர் இயற்கை நிரம்பிய கிராமத்தில் வாழ்வதுபோல வருமா? "நம் தாய்நாட்டில் நாம் சுதந்திரமாகவும், சந்தோசமாகவும், இயற்கையை ரசித்தும் வாழலாம்."

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தி தமிழே!

....................வேலணையூர் பொன்னண்ணா..........

பிறந்த மண்ணை விட்டகன்று
பிறதேசம் தான் வந்து
நம்கையில் நாமே
நம்கையால் விலங்கிட்டு–நல்ல
சுதந்திரக் காற்றை சுவாசிக்க மறந்துவிட்ட
என் தமிழ் இனமே
எண்ணித்தான் பார் உன்னை.


அயல் நாடாம் யேர்மனியில்
அண்ணனின் பிள்ளை
பேசுவதோ டொச்சு மொழி.
அதற்கு அயல் நாடாம் பிரான்சில்
அக்காவின் பிள்ளை பேசுவதோ பிரஞ்சு மொழி.
தம்பியின் பிள்ளையோ கனடாவில்
தரமாக பேசுவதோ ஆங்கிலத்தை.
உன்நாடாம் டென்மார்க்கில்
உன்பிள்ளை பேசுவதோ டெனிஸ் மொழி.

உன்னைப் பெற்றெடுத்து
உனக்கழகாய் பெயருமிட்ட
உன் அப்பா, அம்மா பேசுவதோ–என்
இன்பத்தமிழ்மொழியை.–அம் மொழியை
வண்ணத் தமிழ்மொழியை
வளமாக கற்க வழிசெய்க!
வளமாக கற்க வழிசெய்க!

காகம் தொடர்ந்து பறந்து ஒருவருடம்நெருங்குகின்றது. படைப்பாளிகளையும் வாசகர்களையும் சந்திக்கவைக்க இடம், காலம் ஆராயப்படுகிறது. உங்கள் அபிப்பிராயத்தையும் அறிய காகம் ஆவலாக உள்ளது. தொலைபேசி: 42 28 90 12.

## பாதையை சீராக்கி
## பாலகரை காத்திடுவோம்......த.சேகர்.....ஓடன்ஸ்.....

நாடென்ன நாடு நமக்குப்பிரச்சனை என
வீட்டையும் விட்டு வந்துவிட்டோம்.
தேடுகிறார்கள் எமை எனபதனால் ~இங்கு
இருக்க இடமும் தேடிவிட்டோம்.
வாடகைவீடு என்பதை மறந்து
வளர்க்கிறோம் குழந்தைகளை.
அன்னையின் அரவணைப்பில்
வாழவேண்டியவர்கள்
அடைக்கல வாழ்க்கை வாழுகிறார்கள்.
பிறந்து பத்துநாளில்லை~தாயை
பிரிந்திங்கு வாழவேண்டும்~சிலவேளை
மறந்திடலாம் தாயை.
வளர்கின்ற பிள்ளைகளின்
வளங்கள் மழுங்கினால்~எம்,
சமுதாயம் மழுங்கிவிடும்.
பாதையை சீராக்கி
பாலகரை காத்திடுவோம்
பூகையிரதநிலையத்தில்
புலம்பெயர்ந்த தமிழ்ச்சிறுமி
புலம்புகிறார் ஒருவர் அவளிடம் தமிழில்
முளிக்கிறாள்~அவள்
முதுகுமுறிந்தவள்போல்
தாய்மொழிதெரியாது
தவிக்கின்ற எம்மவரே!
தவறாது படித்திடுவோம்
எம்தமிழை.
படிக்கத்தான் வேண்டும்~நாம்
பலநாட்டு மொழிதனை~ஆனால்
தட்டிக் கழிக்கக் கூடாது~எம்
தாய்நாட்டு மொழிதனை.
பள்ளிப்பருவத்தில்
பாவற்காய் போலிருந்தது
பாரதியாருக்கு படிப்பு.
தாயின் தர்மத்தால்~தரம்
உயர்ந்துவிட்டார் பாரதியார்.
பாரதியைப்போல்~எம்
பாலகரை உயர்த்தி
நாளைய சமுதாயம்
நல்லதாய் அமைய
நாழும் உழைத்திடுவோம்.
கண்ணிருந்தும் பார்வையின்றி
தவிக்கின்ற பாலகரை
கட்டாயம் காத்திடுவோம்
கவனத்தில் கொண்டிடுவோம்.





படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை_

## மேலைநாடும் தமிழ் பெற்றோரும்—பிள்ளைகளும்

.........அ. இலங்காதிலகம்.........

மேலை நாடு எங்களின் கனவுலகம். 20 வருடங்களுக்கு முன்பு ஒருவர் இலண்டனுக்கு போகிறார் என்றால் சொர்க்கபூமிக்குப் போகிறார் என்று பலர் எண்ணினார்கள். இப்பொழுதும் அந்த மவுசு குறைந்துவிடவில்லை. மூன்று நாலு லட்சமென்று ரூபாய்களை கொடுத்துவிட்டு நடுவழியில் பலர் தவிக்கின்றார்கள். எல்லைகளை கடக்கும் முயற்சியில் ஒரு சிலர் இறந்துள்ளார்கள். இன்னும் பலர் நாட்டைவிட்டு வெளியேறும் முயற்சியில் இருக்கிறார்கள். எந்தவிதத்திலாவது மேலைநாட்டுக்கு வந்துவிடவேண்டும் என்ற ஆர்வம் குறைந் துவிட்டதாகத் தெரியவில்லை. நாட்டுநிலமையும் அவர்களை "ஓடு ஓடு" என்று விரட்டுகின்றது. ஆனால் சில காலமாக இங்கு வாழ்கின்றவர்களோ "நிறைவு இல்லாத ஒரு வெற்றிடம் தங்களைச்சூழ்ந்துள்ளது" என்ற போக்கில் வாழ்கின்றார்கள்.அதிலும் வளர்ந்தபிள்ளைகளுள்ளவர்கள் "ஏதோ ஒரு முள்ளின்மேல் நடப்பவர்கள்போல " வருந்துகின்றார்கள். இவர்களைப்பிடித்து ஆட்டும் கிலிதான் என்ன? எங்கள் எதிர்காலம் எங்கே எப்படி அமையும்? வெள்ளையர்களுடைய கலை கலாச்சாரத்தில்,பண்பாட்டில்,வாழ்க்கை முறையில் நமதுபிள்ளைகள் மூழ்கி வெள்ளையர்களைப்போல மாறிவிடுவார்களா? அதாவது தமிழர்களது கலை கலாச்சார பண்பாட்டு வாழ்க்கைமுறையினைக் கைவிட்டு விடுவார்களோ? என்று நினைக்கின்றார்கள்.

இத்தனை கேள்விகளை கேட்டாகிவிட்டது மனிதனுக்கு பற்றுகள் அதிகம்;நிறப்பற்று,இனப் பற்று,மொழிப்பற்று,சமயப்பற்று,குடும்பப்பற்று, கடந்தகால எதிர்கால சந்ததி என்பவற்றில் பற்று என்று ஏராளம் பற்றுக்கள் உள்ளன.

ஆகவே ஓரினம் மற்றொரு இனத்துடன் கலந்து ஐக்கியமாகி தன்னுடைய தனித்தன்மையை இழக்க எப்போதும் விருப்பம் கொள்வதில்லை. மாறாக வேற்றுமையில் ஒற்றுமையை காணவிளையும். இந்த அடிப்படையில்; தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும்தங்கள் பரம்பரை என்கின்ற நிலையில்,தன்மையிலிருந்து விலகாமலிருக்க முயற்சிப்பதோ அல்லது அதனையிட்டு விசனிப்பதோ தவிர்க்கமுடியாத உண்மையாகும்.

டென்மார்க்கில் தமிழர்களின் வாழ்வானது ஒரு தசாப்தத்தை தாண்டிவிட்டது.ஒருசில தமிழர்கள் இந்த சமூகத்துடன் தங்களையும் இணைத்தே பார்க்கிறார்கள்.இன்னும்சிலர் டனிஸ் சமூகத்துடன் ஒட்டியும் ஒட்டாமலும் பிரிந்தும் பிரியாமலும் வாழ்கிறார்கள்.பலர் தாய்நாட்டுக்கு போய்விட வேண்டுமென்று நினைக்கின்றார்கள்.இன்னும் பலர் தாய்நாட்டில் ஒருகால், மேலைத்தேயத்தில் ஒருகால் என்று வாழ்வோமா என்றும் நினைக்கிறார்கள்.இப்படியான மனநிலையில் பெற்றோர்கள் வாழ்ந்துகொண்டிருக்க பிள்ளைகளோ பெற்றோரின் விருப்புவெறுப்பு ஆசாபாசங்களுக்கும் இந்நாட்டு மக்களின் ஆசாபாசங்களுக்கும் விருப்பு வெறுப்புகளுக்குமிடையில் சிக்குண்டு நெரிபட்டு என்ன செய்வதென்று அறியாது திணறிக்கொண்டிருக்கின்றார்கள்.

பெற்றோர்களுக்கு அதாவது வளர்ந்தவர்களுக்கு தாம் வாழும் நாட்டுமக்க ளுடன் மிகவும் அன்னியோன்யமாக பழகவேண்டுமென்ற கட்டாயம் ஒருபோதும் ஏற்ப்பட்டதில்லை. வேலைத்தலத்தில்கூட வேலைக்குப்போகின்றார்கள்,வேலையே கண்ணாக இருக்கிறார்கள், வீட்டுக்கு வருகிறார்கள்,தமிழ்நண்பர்களுடன் தொடர்பை ஏற்ப்படுத்திக் கொள்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் தமிழர்கள் பலர் தமது வட்டத்திற்குள்ளேயே வாழ்கின்றார்கள். ஆனால் இவர்களுடைய பிள்ளைகளின் நிலமைகள் மிகமிக வித்தியாசமானது.



படிப்பகம்

www.padippakam.com

பாலர்நிலையம்,பாடசாலை,ஓய்வுநேர சுறுசுறுப்பு நேரம்,விளையாட்டுத்திடல்,குடியிருப்புப்பகுதி, ஆகிய பல இடங்களில் இவர்களின் கவனம் மிகவும் தீவிரமாக ஈடுபடுகின்றது.எதிலும் சுதந்திரமாக தம்மை ஈடுபடுத்திக்கொள்கின்றார்கள். இவர்களுக்கு நிறைய நண்பர்கள் நண்பிகள்.. இவர்கள் அனைவருமே டனிஸ் நண்பர்களாக இருப்பார்கள். தமிழ் நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு மிகக்குறைவே.பலவிதங்களில் விரிவடையும் இவர்களது நட்பு விரைவில் இவர்கள் இந்நாட்டுப் பிள்ளைகளோடு கலந்தே விடுகின்றார்கள்.இவர்களிடமிருந்து நாம் பிரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறோம். பிள்ளைகளை ஈர்க்கும் சக்தியாக இந்த நாட்டு சுதந்திரச் சூழல் அமைந்திருப்பது; எங்கள் கட்டுப்பாடான குடும்ப சமூகவியலுக்கு விலக்காக உள்ளது.

பிள்ளைகள் பெற்றோரை மதிக்கிறார்களில்லை. என்று பெற்றோர்கள் விரக்தி அடைகின்றார்கள். தமது கனாக்களை பிளைளைகள் அதை நனவாக்கவேண்டுமென்று பிள்ளையின்மீது பெரும்பழுவையேற்றி பிள்ளையை திக்குமுக்காடச்செய்கின்றார்கள்.இத்தகைய நிலையில் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமி டையே ஓர் இடைவெளியை ஏற்படுத்துகின்றது. ஆனால் வெளியுலகமோ பிள்ளைகளுக்கு விழிப்புணர்வைத்தூண்டும் வகையில் பலகாரி யங்களை நாளுக்கு நாள் செய்துகொண்டிரு க்கிறது.அதனூடாக பிள்ளைகள் உலகைப் பார்க்கிறார்கள். பெற்றோர்களின் சிந்தனையிலி ருந்து தாங்கள் மாறுபட்டவர்கள்,தங்கள் உலகம் வேறுஎன்ற நிலையில்,பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்குமிடையே பிணக்குகள்,கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு பெற்றோரை எதிர்க்கின்ற நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

உணவு,உடைவிடயத்தில், வாழ்க்கையின் தத்துவத்தை புரிந்துகொள்ளும் விதத்தில் ஆண் பெண் இருபாலாரும் பழகும்விதத்தில், குடும்ப கௌரவம் என்று பெருமைப்படும் விதத்தில், சிந்தனையில் கருத்தில் .....என இன்னும் எத்தனையோ விடயங்களில் கருத்துவேற்றுமை பொதிந்து கிடக்கின்றன.

தமிழ்பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை என்றுமே சுயமாக இயங்கவிடுவதில்லை.பிள்ளை யின் எல்லாவிடையங்களிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்றார்கள்.

பிள்ளை தானே சுயமாக இயங்க ஆரம்பிக்கும் பருவத்தில்கூட பெற்றோர்கள் அதற்கு ஒத்துழைப்பு கொடுப்பதில்லை. 3 வயதுப் பிள்ளைக்கு ஒரு தாய் தொடர்ந்து உணவை தனது கையால் ஊட்டவேண்டுமா?

ஆகாரம் ஒரு மனிதனின் முக்கியமான தேவை. இதில் பிள்ளை சுயமாக இயங்கப்பழக்க வேண்டும்.நான் உண்ணவேண்டும் என்ற எண்ணம் பிள்ளையிடம் ஏற்படவேண்டும். சுயமாக இயங்கும் எண்ணத்தை தூண்டிவிட வேண்டும்.மற்றவர்களை சார்ந்தநிலையை அப்பிள்ளையிடமிருந்து போக்கி தன்னம்பிக்கை எனும் மாபெரும் சக்தியை ஏற்படுத்தவேண்டும். காலம்சென்ற பாரதப்பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு அவர்கள் சிறுபையனாக இருக்கும்போது, ஒருநாள் வீட்டில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு மின்சாரபல்பை ஒருதடியினால் அடித்தார்.அது உடைந்து சிதறியது. குசியில் கண்ணில்தென்பட்ட ஏனைய பல்புகளையும் உடைத்தார்.வேலைக்காரன் செய்வதறியாது நேருவின் தந்தையிடம் விடயத்தைச் சொன்னான். "பரவாயில்லை அத்தனை உடைந்த மின்சார பல்புகளுக்கு பதிலாக புதிய பல்புகளை மாற்றிவிடு. மகனை தடுக்காதே அவன் உடைக்குமட்டும் உடைக்கட்டும்." என்றார் தந்தையார்.வேலைக் காரன் மின்சார பல்புகளை மாற்றமாற்ற நேருவும் தன்மனம்போல் உடைத்துக் கொண்டே இருந்தார்.அவரை யாரும் தடுக்கவில்லை.மனம் போல நடக்கவிட்டார்கள்.தன்னம்பிக்கையும் கூடவே வளர்ந்தது.பிரிட்டிஸ் சாம்பிராச்சியத்தின் வெருட்டலுக்கோ அதிகாரத்திற்கோ அடிபணியாது தன்னம்பிக்கையோடு போராடிய ஒரு நேரு உருவானார்.



படிப்பகம்

www.padippakam.com

## ஒரு டனிஸ் குழந்தையின் பாடல்

......................................................................தமிழில்: விழி

ஒரு குடும்பம் என்றால்
யாராவது சிலர் சேர்ந்து வாழ்வதற்கே.

எனது சில நண்பர்களுக்கோ
இரண்டு குடும்பங்கள்.
அதனால்
தாங்கள் எங்கே வாழ்வேண்டும் என்று
ஒருபோதும் அவர்களுக்கு தெரிவதில்லை.

எங்கள் குடும்பத்தில் நாங்கள் 5 பேர்.
ஆனால் – எங்கள் வீட்டு நாய்க்கு
பேன்பிடிக்கும் போது18000 பேராகிவிடுவோம்.
ஒரு சகோதரி, ஒரு தம்பி அத்துடன் அம்மா அப்பா.
பெரியவனானதும் நான் இடம்பெயர்ந்துவிடுவேன்.

ஏதாவது துன்பம் நிகழும்போது
மனிதன் அதனை பலருடன் பகிர்ந்துகொள்கிறான்.
ஏதாவது இன்பம் நிகழும்போது –அது
முழுவதும் எனக்கே என்கிறான் அவன்.

அப்பாவுக்கு இரவுவேலை.
அப்பா படுக்கைக்கு போகும்போது –அம்மா
வேலைக்குச்செல்ல படுக்கையால் எழுகிறாள்.
சகோதரி அடுத்த கிராமத்தில் படிக்கிறாள்.
தம்பி எந்தநாளும் வருத்தக்காரன்.

ஆனால்
அப்பா ஒரு முட்டைக்கேனும் இங்கு உப்பில்லை
என்றாலும் –நாங்கள் எப்போதும் குதூகலமாக
இருப்போம்.
உப்பில்லாத முட்டையை தின்று நான்
எப்படியும் சமாளித்துவிடுவேன், எங்களிடம்
முட்டைக்காவது பணமிருந்தால்.

ஏதாவது துன்பம் நிகழும்போது மட்டும்
மனிதன் அதை பலருடன் பகிர்ந்துகொள்கிறான்.
ஏதாவது இன்பம் நிகழும்போது –அது
முழுவதும் எனக்கே என்கிறான் அவன்.

(ஒரு அடிமட்ட டனிஸ் குடும்பம் ஒன்றில் குழந்தைகளின் மன உணர்வுகளை சித்தரிக்கும் ஒரு கவிதை.)

## "அகதிச்சிறுவன் ஒருவனின் கவிதைகள்"

..............................அலன் தர்மகுலசிங்கம் எனும் 11 வயதுத் தமிழ் சிறுவனால் டெனிஸ்மொழியில் எழுதப்பட்ட இக்கவிதைகளை தமிழில் தருபவர் விழி........................

### எங்கே

நான் நடந்தேன்..
நான் விரும்பிய இடமெலாம் நடந்தேன்.
கோடைகாலமதை நோக்கி நடந்தேன்.
குளிர்காலமதையும் நோக்கி நடந்தேன்.
நான் எங்கே போதல்வேண்டுமோ....
அவ்விடம் நோக்கி நோக்கி
இப்போது நான் நடக்கிறேன்.

### நேரம்

ஒரு கோடைகாலத்தைப் போன்றவன்
"பிளம்" பழங்களை உண்கிறேன் நான்.
கோடையை நோக்கி குளிர் வருகிறது;
அதுவரையும்
நான் அப் "பிளம்" பழங்களையே உண்கிறேன்.

### இல்லை

குண்டுகளா! அது வேண்டாம்.
அணுக்குண்டுகளா! அதுவும் வேண்டாம்.
எங்களுக்கு அவற்றில் விருப்பமில்லை.
உனது வழியில் நீ போய்விடு.



### யார்

யார் நல்லவர்கள்?
யார் கெட்டவர்கள்?
தெரியவில்லை எதுவுமே எங்களுக்கு.
யாரை நாம் நம்புவோம்?
என்னையா ? அல்லது உன்னையா ?

### நட

மழை அது வருகிறது போகிறது.
சூரியன் அவன் உதிக்கிறான்...மறைகிறான்.
நீ வரும்போது நான் போகிறேன்.
நான் வரும்போது நீ போகிறாய்.



படிப்பகம்

www.padippakam.com

# தோப்புக்கரணங்கள்

**முல்லையூரான்**

குறுநாவல் – தொடர்

9



ஒருமாலை சரியும் நேரம். பின்நேரச் சந்தை முடித்து பாறிக்கிளவி வீடுநோக்கிக் கொண்டிருந்தாள். மேச்சல் முடித்துத்திரும்பும் மாடுகளைக் கலைத்தபடி ரஞ்சன் ஓடிக்கொண்டிருந்தான்.பொன்மணியின் முன்வீட்டு கணபதிப்பிள்ளை காறித் துப்பியபடி கடப்பைத்திறந்து வீட்டுக்குள்ளேகுகிறார். அர்ச்சுனனை இன்னமும் பள்ளவெளி வயலால் வரக் காணோமென்ற தவிப்பை மடியில் கட்டியபடி பொன்மணி அந்த தார்த்தெருவை நீண்டு நோக்கிக்கொண்டிருந்தாள்.இழுத்துக்கட்டிய சேலையுடன் நாமுத்தன் பொஞ்சாதி தலையில் கிடக்கும் தடிக்கட்டுகளை இறக்கியபடி துயரத்துடன் பாயும் பெருமூச்சை கலைத்தபடி

"என்ன பிள்ள இதில நிக்கிறாய் .....முகமும் சரியில்ல"

"மோனைக்காணேல்ல அதுதான் பாக்கிறன்"

அதுசரி டென்மார்க்கில இருந்து வந்தவையள் போட்டினமா?

"ஓமண.....இஞ்சை குடியிருக்கவே வந்ததுகள்.நேற்றுத்தான் போயினம்."

"அதுகள் வந்ததுக்கு அர்ச்சுனன் வீட்டில தங்கேல்ல" பொன்மணி ஆசுவாசப்பட்டாள்.

"இருக்காத பின்ன சொந்த மச்சானல்ல அந்தப்பிள்ள." நாமுத்தன் பொஞ்சாதி தனது சின்னத்தீப்பெட்டியை மெல்ல உரசினாள்.

பொன்மணியின் கண்களிலிருந்து பொதுக்கிட்டநீரை சேலைத்தலைப்பால் அவள் துடைத்துக்கொண்டாள்.

"என்னண நீ தடிகொடியோட வாறாய்"

"பின்ன என்ன என்ர வீடு எரிஞ்சதுக்கு ஊராரே தடிவெட்டி வீடுகட்டித்தரப்போகினம்.

நானும் தனிச்சன்.வீடு எரிஞ்சதுக்குப்பிறகு தங்கச்சி வீட்டில இரண்டுநாள், பிறகு மச்சாள் வீட்டில ஒருநாள், தாவாரத்தில கிடந்தன். நாய்வளத்தமாதிரித்தான் சோறு தந்தினம்.

எத்தின நாளைக்கு தரித்திரச் சீவியம்........எரிஞ்சவீட்டுக்குள்ளதான் நான் இப்ப இருக்கிறன்.

மழை பெய்யத் தொடங்கிறதுக்குள்ள புதுவீடு கட்டவேணும். அதுதான் கொஞ்சம் கொஞ்சமாய் தடி, கப்பு தறிச்சு சேர்க்கிறன்."

அந்தத்தள்ளாத வயதிலும் அவளின் வீறாய்த்த மனம் பெருமையோடு சொல்லிக்கொள்கிறது.

தார்றோட்டில் அர்ச்சுனனின் ஊன்றுகோல் தடியின் சப்தம் கேட்கத்தொடங்க பொன்மணி தனது பேச்சை முடித்துக்கொண்டு வீட்டுக்குள் மறைந்தாள்.

ஆறுமணிச்செய்திக்கான வானொலி நட்டுவமேள இசை தொடரநாமுத்தன் பொஞ்சாதி தடிக்கட்டுகளை தோளில் எடுத்துக்கொள்கிறாள்.

⁂

டனிஷாவின் அம்மா வசந்தி வீட்டுக்குள் விளக்குகளை ஏற்றுகிறாள். மெல்ல சுடரும் ஒளியில் அவளின் இறுகிப்போய்கிடக்கும் முகம் கல்லில் பட்ட ஒளியாய் இறுகிக்கிடக்கிறது.கண்கள் சிவந்திருந்தன.

நாட்கணக்காக எழும்பாது படுத்துக்கிடக்கும் டனிஷாவை குரல்கொடுத்து எழுப்புகிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

கோபத்தோடு உள்ளிருந்து பதில்வருகிறது.
கொஞ்சநாள்செல்ல எல்லாம் பழக்கத்திற்கு வந்துவிடும் என்ற வசந்தியின் எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் உடைத்துக்கொண்டு டனிஷாவின் மனநிலைசீரற்று அவளது அமைதியற்ற பழக்கங்கள் அதிகரித்துக் கொண்டே வந்தன.
அதுவும் டென்மார்க்கிலிருந்து கென்றிக் வந்துபோனதிலிருந்து அதிகரித்துப்போய்விட்ட மனக்கோளாற்றை தீர்க்க மருந்து மாத்திரைகளை நாடினர்.
அதன்படி திரவியப்பரியாரியார் இன்று வருவதாக ஏற்பாடு.
நவத்தார் முற்றத்தில் நின்றபடியே படலையை நோக்கியபடி நின்றார்.
சைக்கிள் உருளும் சப்தத்தோடு திரவியப் பரியாரியார் வந்தார்.
பாய் விரிந்தது.
விளக்கை எடுத்து நடுவில் வைத்துக்கொண்ட நவத்தார் ஆவலோடு திரவியத்தாரை பார்த்துக் கொண்டிருந்தார்.
"தமிழ் படிப்பிச்சிருக்கவேணும். தவறீட்டியள்."
"அடக்கமா வளர்த்திருக்கவேணும்....தவறீட்டியள்."
" சரி தூர நாட்டில கண்டது நடந்திருக்கும்...... மறைச்சிருக்கவேணும்..தவறீட்டியள்."
"வெறுங்கையோட வந்தாலும் சரிக்கட்டலாம். ஆனால் இந்த நாட்டுக்கு பொருந்தக்கூடிய பாசையையும்,தொழிலையுமெல்லோ நீங்களும் பிள்ளையளும் பின்பற்றியிருக்கவேணும் தவறீட்டியள்."
அங்க மரக்காலயில வேலைசெய்தியள். இஞ்சை அது தச்சர்மார் வேலை எண்டு கூச்சப்படுறியள்."
ஏதாவது சொத்துப்புலம், பூமி எதையாவது வைச்சிருந்தியளோ....எல்லாத்தையும் வந்து வித்தெல்லோ எடுத்துக்கொண்டுபோனியள்."
இப்ப பேய்பிடிச்சமாதிரி ஒரு குமரையும் கொண்டு இஞ்சை வந்து தடக்குப்படுறியள்."
எதை எடுத்தாலும் தவறையெல்லோ செய்துபோட்டு தவறிவிழுந்த கண்போல.......குருடாய் நிக்கிறியள்."
தொடர்ந்து தனது தவறுப்பட்டியலை நீட்டிக்கொண்டுபோன திரவியம் பரியாரியாரின் இருமலுக்குள்ளால் வந்த கள்வாடையை மூக்கைப்பொத்தி சமாளித்தாள் வசந்தி.
"பிள்ளையை பாக்கத்தேவையில்ல.
எனக்குத் தெரியும் எப்பிடி இருக்குமெண்டு. சாப்பிடாது.
கோபம் வரும் ....மெலிஞ்சுபோய் தடிமாதிரி வந்திருக்கும்.
கண்களைச்சுற்றி கருவளையங்கள் போட்டிருக்கும். நித்திரைகொள்ளாது.
வெறிச்சுப் பாக்கும்.
தன்பாட்டில பேசும்.
இதுதான உங்கட மகள். மருந்திருக்குதுதான். ஆனால் குடுத்துப்பாருங்கோ.
சுகம்வராது. ஆனால் குறைச்சு வைச்சிருக்கும். அவ்வளவுதான் என்றபடி ஒரு மருந்துமடிப்பை நவாவிடம் நீட்டியபடி.........
"கலியாணத்த செய்துவையுங்கோ....அதுதான் மருந்து-ஆனால் இப்பதான் வந்துபோன அந்த வெள்ளைக்காரனோடை கடலில குளிச்சவிசையம் ஊரெல்லாம் பிரண்டுபோய்கிடக்குது.
அதுசரி பள்ளிக்குடம் விட்டுப் பாத்தனீங்களோ?"
கதைக்குள்வந்த கேள்வியோடு தரித்தார் திரவியம் பரியாரியார்.விட்டனாங்கள்........5 ம் வகுப்பிலதான் அவளை சேர்த்தினம்.வாத்திமாரும் பொடியளுமாய் சிரிக்க அவள் பள்ளிக்கூடத்தைவிட்டு ஓடிவந்திட்டாள்.
"குடே" (வணக்கம்) என்றது இருட்டுமூலையிலிருந்த டனிஷாவின் பச்சைக்கிளி.
இது என்னவாம் என்ற செருமலோடு " உதகளுத்தைப்பிடிச்சு திருகிக் கொல்லுங்கோ உதுதான் உங்கட பிள்ளைக்கு எமன்." என்றபடி எச்சிலை உமிழ்ந்தார் பரியாரியார்.
"ஊர் கதைக்கட்டும்.......வெளிநாடுகளில இருக்கிற நட்புக்கும் காதலுக்குமான வித்தியாசத்த உணராத இந்த வன்னிக் காட்டுக்குள்ள......அவள் அதுகளோட கடலில குளிச்சத பெரிசுபடுத்தி கதைக்குதுகளாம். ஊருலகம்தெரியாத காட்டார்." என்றபடி கோபத்தோடு எழுந்தாள் வசந்தி.
"உப்பிடி கதைக்காதையுங்கோ. இப்ப இந்தக் காடும் இல்லாட்டி எங்க போயிருப்பியள். நாசியள் இடிக்கிறாங்கள், வீட்டை கொழுத்திப்போட்டாங்க ளெண்டுட்டு ஓடிவந்த இந்த மண்ணின் சுதந்திரத்திற்காக எத்தனைபேர் செத்தம்.ஏன் என்ர ஒற்றைக்காலும் இந்த மண்ணுக்குள்ளதான் கிடக்குது." என்றபடி வந்தான் அர்ச்சுனன்.

(தொடரும்.....)



படிப்பகம்

www.padippakam.com

## அறிதிறன் காணல் போட்டி இலக்கம் – 2


## பொருத்திக்காண்பது என்ன?

1. கீழே சீரற்று குழம்பிப்போயுள்ள ஒரு படத்தின் துண்டங்களை வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள்.
2. வெட்டி எடுத்த துண்டங்களை நீங்கள் சரியாகப் பொருத்தி எடுக்கும்போது அங்கு ஒரு காட்சியை நீங்கள் காண்பீர்கள்.
3. நீங்கள் காணும் அக்காட்சியைப்பற்றி 15 வரிகளுக்கு மேற்படாமல் விபரக்குறிப்பொன்றை எழுதி உங்கள் பெயர்,முகவரி, வயது என்பனவற்றை குறித்து "Kakam" Baunehøjen 35 3320 Skævinge Denmark. என்ற முகவரிக்கு 25.10.95ற்கு பிந்தாமல் அனுப்புங்கள்

### போட்டி விதிகள்

1. யாரும் பங்குகொள்ளலாம்
2. சரியாக பொருத்தப்பட்ட படமும், அத்துடன் அப்படத்தைப் பற்றி எழுதப்படுகின்ற விபரக்குறிப்பின் சிறப்பும் கவனத்தில் கொள்ளப்பட்டு போட்டியில் ஒருவர் தெரிவுசெய்யப்படுவார்.
3. தெரிவுசெய்யப்படும் நபரின் பெயர் விபரங்களும், அவரால் எழுதப்படும் படத்திற்கான விபரக்குறிப்பும் அடுத்த மாத காகத்தில் வெளியிடப்படுவதோடு சிறந்த தமிழ்நூலொன்றும் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

......................காகம்......................





படிப்பகம்

www.padippakam.com



காகம் இதழ் 9 ல் வெளியான "பொருத்திக் காண்பதென்ன" இல. யா.1 ற்கான போட்டியில் கலந்துகொண்ட போட்டியாளர்களுக்கு காகத்தின் நன்றிகள்.

எல்லோருமே நல்ல விளக்கங்களை எழுதியிருந் தார்கள்.மகிழ்ச்சி.

இந்தமுறை தெரிவான வாசகர்:பொன்மணி– பிலூாண்ட்.டென்மார்க்.

### அவர் எழுதி அனுப்பிய படவிளக்கம்

........................................................................

இது ஒரு கிராமப்புற சூழலும்,இயற்கை வளமும் கொண்ட ஒரு சிங்களப்பிரதேசம்.

தாரில்லாறோட்டில் தன்தொழிலுக்காக ஒரு சிங்கள வியாபாரி காத்துநிற்கிறாா்.இவர்ஒரு ஐஸ்பழவியாபாரி.இவர் நிற்பதும் கிராமப்புற பாடசாலையின் முன்புறமாக இருக்கலாம்.நேரம் மதியமாகவோ அல்லது பாடசாலை விடும் நேரமாகவோ இருக்கலாம்.பாடசாலை மாணவர்கள் வருகின்றார்கள் போலத் தெரிகின்றது;ஏனெனில் வியாபாரியின் முகத்தில் ஒரு புன்னகை தெரிகின்றது. இன்று அவர்பாடு கொண்டாட்டம்தான்.

இவர் ஒரு சிங்களவர்.இது ஒரு சிங்களப்பிரதேசம் என்பதற்கு; அவரிடம் இருக்கும் புதிய சைக்கிளும், ஐஸ்பழப்பெட்டியிலுள்ள சிங்கள எழுத்தும் உறுதிப்படுத்து கின்றது...........................................பொன்மணி...பிலூாண்ட்


காகம்

முற்றமெல்லாம் புழுங்கல் – அதனால்
எம் நெஞ்சமெல்லாம் அம்முற்றம்.
–
ஒரு தாய்

"இது ஒரு தமிழ் மாசிகை"
ஏடு இல: 10– ஐப்பசி 95
வெளியீடு: ரூலி பப்ளிக்கேசன்
Baunehøjen 35
3320 Skævinge
Denmark
Tlf: 42 28 90 12

விலை: ஒரு வருடம்
( 12 இதழ்கள் )–200
டனிஸ்குரோன்கள்
வெளிநாடுகள்: 50 Us

கட்டணம் செலுத்தவேண்டிய
வங்கி:
Tuli Publikation
Den Danske Bank
Hillerød Afdeling, Slotsgade 16- 18
Postboks 255
3400 Hillerød Denmark.
A/C NO : 35 43 - 38 69 87
அல்லது
Post Giro : 94 73 65 3

ஆசிரியர்: முல்லையூரான்
படைப்பாளிகள்தொடர்பு: திரு.ரவி .Tlf: 86 40 38 05
வாசகர்கள் தொடர்பு: திரு.செல்வன் Tlf:86 64 51 98
வடிவமைப்பு: ரூலிபதிப்பகம், ரவி
அட்டைப்படம்: திரு.சிவநாதன்.


சஞ்சிகையில் இடம்பெறும் ஆக்கங்களுக்கு
படைப்பாளிகளே
பொறுப்பாளிகளாவர்.காகத்தின் எண்ணங்களை
படைப்பாளிகள் பிரதிபலிக்கவேண்டுமென்பதில்லை.
.....................காகம்.....................



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

"Postbesørget blad, (0900 KHC) " -51033

Til: [illegible]evan
Dysseg[illegible] 5,2,tv
7[illegible]0 [illegible]stebro

Afs: Tuli Publication Baunehøjen 35, 3320 Skævinge, Denmark

படிப்பகம்